# தென்மொழி


## இணைபவர்கள் இணையட்டும்!

பேசியவர் எல்லாரும் பேசிக்கொண்
    டிருக்கட்டும்; பின்பு றம்போய்
ஏசியவர் எல்லாரும் ஏசிக்கொண்
    டிருக்கட்டும்; இறுமாப் பாய்க்கை
வீசியவர் எல்லாரும் வீசிக்கொண்
    டிருக்கட்டும்; வினைகள் செய்வோம்!
பாசியகன் றிவ்வினத்தின் பளிங்குநீர்
    தெளிவிப்போம்! பங்கேற் பீரே!

முகந்திருப்பிக் கொள்பவர்கள் முணுமுணுப்புச்
    செய்யட்டும்; முரண்பா டுற்றே
அகந்திருப்பிக் கொள்பவர்கள் அண்ணுந்து
    விம்மட்டும்; அகல்நி லத்தை
நுகந்தூக்கித் தோள்வலிக்க உழுதுபயிர்
    விளைத்திடுவோம்! நோகா தங்கே
உகந்துண்ண வருவோர்க்கே உவந்தளிப்போம்!
    உழைப்பளிக்க உதவு வீரே!

தூங்குபவர் தூங்கட்டும்; துலங்குபவர்
    துலங்கட்டும்; தொளைகள் எண்ணி
விங்குபவர் விங்கட்டும்; விக்குபவர்
    விக்கட்டும்; விளைவைக் கண்டே
ஏங்குபவர் ஏங்கட்டும்; எந்தமிழர்
    நலங்காண இருகை ஏந்தித்
தாங்குபவர் தாங்கட்டும்! தயங்க, இனி
    நேரமில்லை; தாவு வீரே!

இருப்பவர்கள் இருக்கட்டும்; இணைபவர்கள்
    இணையட்டும்; இன்றும் நேற்றும்
தெருப்படியில் அமர்ந்தபடி படிப்படியாய்
    நமையளந்து தேறிப் பார்த்தே,
உருப்படியாய் ஒருபடியும் அளக்காதார்
    உட்கார்ந்தே வான்பார்க் கட்டும்!
நெருப்படியும் குளப்படியும் நீள்வினையார்க்
    கொருபடியென், றிணைவீர் வந்தே!

(தொடர்ச்சி முதல் பக்கம்)


சுவடி : 18 ஆசிரியர் பெருஞ்சித்திரனார் விலை

ஓலை : 2 உருபா : 1-25


www.thamizham.net - Free E book No 7514

# நமக்கு வந்த மடல்கள்

0 : 868 : பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம் தென்மொழி சுவடி 18 ஓலை 1, படித்தேன். "உலகத் தமிழினம் ஒன்றெனத் திரண்டது" என்ற முகப்புப் பாடலில் தங்களின் "நெடிது நோக்கும் நோன்மை" புலப்படுகிறது. "வாருங்கள் தமிழர்களே" என விளித்து அனைவர்க்கும் விடுத்தது-என்ன அறிவார்ந்த-அருமை மிக்க அறை கூவல் ! நன்கொடை விடுத்தல் பற்றிய வேண்டுகோளில் பொருள் தண்டுதலின் இலக்கணத்தையே வகுத்துள்ளீர்கள். நன்கொடை கேட்கும் பணிவான - சீரிய - பொருள் மிக்க வேண்டுதல் - அடடா என்ன அருமை ! அனைத்திற்கும் மேலான ஒப்புவமை கூற வொண்ணு ஆசிரியவுரை. இன்றைத் தமிழின இழிவுகள், அரசியல் கீழ்மைகள், பொருளியல் வேறுபாடுகள் ஆகியனவற்றை மிகத் தெளிவாகக் காட்டியுள்ளீர்கள். கலை என்ற பெயரில், பொருள் நோக்கத்தால் நஞ்சினை நாட்டில் விதைக்கும் இழிவுகளை நன்கு வெளிப்படுத்தியுள்ளீர்கள். புதுமை என்றும், இளமை என்றும், என்னென்ன தோன்றுகிறதோ அவை எல்லாம் எழுதித், தக்க பற்றுக் கோடின்றித் தவிக்கும் தமிழ் இளைஞர் குமுகாயத்தைப் பாலு -ணர்வுக் குழியில் தள்ளிச் சீரழிக்கும் - கொடுமையினை - அந்த ஆண், பெண் எழுத்தாளர்களின் நச்சுத் தன்மையை என்னமாக எடுத்துக் கூறியிருக்கிறீர்கள் ! எத்துணைத் தெளிவாகக் கூறி, எத்துணைத் துணிவாகச் சாடியிருக்கின்றீர்கள். எவர்க்கும், எதற்கும் அஞ்சாது கீழ்மைகளைச் சாடிய திறம் கண்டு வியந்து போற்றி நிற்கின்றேன். இனியும் எந் நிலையிலும் தங்களின், இச் சிறுமை கண்டு பொங்கும் சீற்றம் குறையாதிருக்க வேண்டுகிறேன்.

நந்தமிழ் நாட்டின் நிலையைப் பல்துறைகளிலும் எண்ணி, "அல்லல்பட்டு ஆற்ருது அழும் உங்களின் இப் பெருமுயற்சி" வீண் போகப் போவதில்லை. "நெடிது நோக்கும் நோன்மை" பெற்ற வனும் "சிறுமை கண்டு பொங்கு"பவனும், "சொலல் வல்லன், சோர்விலன், அஞ்சான்" ஆகியவனுமான ஓர் உண்மைத் தொண்டனை, பேரறிஞனை, பெரும் பாவலனைத் தமிழன்னை தன் தளை நீக்கப் பெற்றே விட்டாள். "வாராது போல வந்த இம் மாமணி" தோற்கப் போவதில்லை. காலத்தின் கட்டாயத்தினுல் உங்களால் தோற்று விக்கப் பெறும் இவ்-வியக்கம் வலியதாகும். அதே கால கட்டாயம் அனைத்துத் தமிழர்களையும் அதன் வளர்ச்சிக்குக் கைகொடுக்கச் செய்தே தீரும். இஃது உறுதி. அன்பன், —மா. ஆறுமுகம், பல்லடம்.

0 : 869 : பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். இம் மாதத் தென்மொழி இதழில் வெளியான தங்களின் 'ஆசிரியவுரை' உண்மைத் தமிழனின் உள்ளத்தைத் தொடும் வண்ணம் — துடித் தெழும் வண்ணம் அமைந்துளது என்ருல், அது மிகையாகாது ! தமிழ்க் குடியில் பிறந்து, தன்மானம் இழந்து, சோற்ருேடு அன்ருடம் சேற்றைக் கலந்துண்பதற் கொப்பத் தமிழோடு பிறமொழிச் சொற் களை அளவின்றிக் கலந்து—உளமகிழ்ந்து—உரையாடித் தமிழுக்குப்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7514

# உலகத் தமிழினம் ஒன்று படுக்கும்
# கழக முன்னேற்றம் காண்குறுவோமே!

அன்னைத் தமிழ்மொழி அழகும் தூய்மையும்
முன்னைப் பழம்பெரு மொய்ம்பும் எய்துதல்!

உழைப்பவர், அறிஞர், உயர்ந்தோர், தாழ்ந்தோர்,
இழைத்த சாதிகள், மதங்கள் — எனும் பல
தெரிநிலை வேற்றுமைத் தீங்குகள் அற்ற
சரிநிகர் என்னும் சமநிலைக் குமுகம்!

இழிவும் பூசலும் ஏமாற்றும் இலதாய்ப்
பழிவரின் விலகிடும் பண்பமை அரசியல்!

இயற்கைப் பொருள்களும் இயற்றல் பொருள்களும்
மயற்கை யின்றி, மக்கள் அனைவரும்
தேர்தலின் அமைத்த திறவோர் அரசினைச்
சார்தலின் அல்லது தனியவர் சாராது,
பொதுமை உரிமை, பொதுமை உழைப்பெனும்
புதுமை நோக்கிய பொருளியல் கொள்கை!

மனமும் அறிவும் வாழ்க்கையும் மாண்புறும்
இனநலன் கெடாத இனியநற் கலைகள்!

பழந்தமிழ் மரபும் பரந்தநல் லெண்ணமும்
இழந்தசீர் ஒழுக்கமும் எங்கணும் பரப்பி
மாந்தவியல் சிறக்க மற்றவர் மரபில்
ஏய்ந்தவை தழுவும் இனியபண் பாடு!

அறுவகைத் துறையினும் அன்றன்று துலங்கும்
அறிவியல் தழுவிய செறிவியல் போக்கு!

— என்றிவ் வெழுநிலைக் கொள்கைகள் ஏந்தி
அன்றைத் தமிழினம் அனைத்து நாட்டினும்
வாழ்முறை தேறி வழங்குநலம் கோரித்
தாழ்வுநிலை போக்கித் தக்கநிலை ஊக்கி,
உலகத் தமிழினம் ஒன்று படுக்கும்
கழக முன்னேற்றம் காண்குறு வோமே!

---

(அட்டை பக்கத் தொடர்ச்சி)

நெடுங்காலம் உழைத்திட்டோம்! நின்றவரார்?
படுத்தவரார்? நிலையா வாழ்க்கை!
அடுங்காலம் வந்திடுமுன் பெருங்கொள்கை —
சிறுமுயற்சி — ஆற்றல் வேண்டும்!
கெடுங்காலம் பற்றியவர் கீழ்நினைப்பர்;
நாமவரைக் கிளற வேண்டா!
நடுங்காத நாவினராய் நலஞ்செய்வோம்,
மொழி, இனத்தை — நாட்டைக் காத்தே!

www.thamizham.net - Free E book No 7514



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[ திருவணம் தி. பி. 1990 (1959) ]




**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்**

புரப்பாசிரியர்கள்: தென்மொழி முல்லைவாணன் (சிங்கை), தென்மொழி மறை. நித்தலின்பனார், தென்மொழி ந. முத்துக்குமரனார். தென்மொழி. ப. துரையரசன்.

அமைச்சர் : அழ. இளமுருகன், அறி. இ.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி : 18] தி.பி.உ0கஉ கன்னி(செப்-அக்தோபர்'81)[ ஓலை : 2

# உ. த. மு. க. தொடக்க மாநாடு! அனைவரையும் பங்கு கொள்ள அழைக்கின்றோம்!



'ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையால் நீளும் குடி,— என்பது, தமிழினத் தலைவர் திருவள்ளுவப் பெருந்தகையின் தகவுரை. குடி நலம் கருதவந்தார்க்கு முதற்கண் வேண்டுவது ஆள்வினை உடைமை என்பது அவர் கருத்து. ஆள்வினை உடைமை என்னுந் தலைப்பில் ஓர் அதிகாரமே திருக்குறளில் இலங்கித் தோன்றுகின்றது. அதில் உள்ள பத்துக் குறள்களுமே துவண்டு கிடக்கும் ஒருவனைத்

www.thamizham.net - Free E book No 7514

தூக்கி நிறுத்த வல்லவை ; தொய்ந்து போன நெஞ்சை இரும்பாக்கும் உரஞ்சான்றவை; சூம்பிப்போன கைகளை முறுக்கேற்றும் திறத்தவை; மடிந்து போன கால்களைத் தூண்களாக்கும் வல்லமை பெற்றவை ; நொடிந்து போன நினைவுக் குதிரைகளைத் தட்டி யெழுப்பி, அயர்ந்து கிடக்கும் அறிவுப் பொறியினில் ஒளிக்கதிர் பாய்ச்சி, இன நலம் காக்க வினைசெயப் புறப்படு என்று வில்லின் விசையால் உந்தித் தள்ளுபவை. இத்தகு ஆள்வினை உடைமைதான் அறிவுக்கும் முன் வேண்டுவதாகக் குடிசெயல் வகை அதிகாரத்துள் வகுத்துக் கூறப் பெற்றுள்ளது. கழக இலக்கியங்களுக்குள் மற்ற எவற்றுக்குமே இல்லாத பெருமைகள் பலவுற்றுள், திருக்குறளுக்கு இருக்கும் தனிச் சிறப்பு என்னெனில், அஃது இன நலத்துக்கு வேண்டுவதான பல கருத்துகளை அக்காலத்திலேயே வெளிப்படுத்தியிருப்பதுதான். தமிழர்களின் பணபியல் வரலாற்றில், பொதுநலத் தொண்டுக்கு இங்குதான் முதன் முலம் காணப்பெறுகிறது. அக் கருத்துகள் 'குடிசெயல்வகை' அதிகாரத்துள் நன்கு வலியுறுத்தப் பெற்றுள்ளன.

நலிந்து போன ஓர் இனத்தின் பெருமை வீழ்ச்சியை, அடிமைச் சிதைவுகளைப் போக்கி, அதனைத் தலைதூக்கச் செய்து வலுப்படுத்து வதற்குரிய கருத்துகள் கொண்டதே இக்'குடிசெயல்வகை' அதிகாரம். இக்கால் நாம் நம் தமிழினத்துக்குச் செய்யும் அனைத்து முயற்சி களுக்கும் இவ்வதிகாரமே தூண்டுகோலாக நின்று துணைசெய்ய வல்லது. அவ்வதிகாரத்தின் முதற்குறளே நாம் இக் கட்டுரைத் தொடக்கத்தில் எடுத்துக் காட்டப் பெற்ற அரிய குறள். தாழ்ந்து போன ஒரு குடியைத் தலைநிமிர்த்துவதற்கு மூன்று மூனைப்புகள் தேவை. முதலாவது ஆள்வினை ; இரண்டாவது அறிவு ; மூன்றாவது நீள்வினை ; அஃதாவது தொடங்கிய வினையைத் தொடர்ந்து செய்வதான ஒரு முயற்சி. இவற்றுள் ஆள்வினை என்பது பல விரிந்த பொருள் களைக் கொண்ட ஒரு சொல். ஆளக்கூடிய தன்மை, எடுத்துக் கொண்ட வினை, முயற்சி, வலிமை, வினைப்பரப்பு, தேவையென்று ஏற்பட்ட செயல்கள் — முதலிய பல பொருள்கள் உண்டு. மொத்தத்தில் ஒரு வினையை எப்படிச் செய்ய வேண்டும் ; எவ்வாறு செய்ய வேண்டும்; எவரைக் கொண்டு செய்ய வேண்டும். எக்காலத்துச் செய்ய வேண்டும் ; எவ் விடத்துச் செய்ய வேண்டும் ; எதுவரை செய்ய வேண்டும் — என்பன போன்றவற்றையெல்லாம் உறுதி செய்வதே ஆள்வினை எனப்படும். ஒருவர்க்கு அறிவு இருக்கலாம் ; ஆனால், ஆள்வினையில்லாமற் போனால் ஒரு வினையைத் திறம்படச் செய்ய இயலாது. எனவே, பொதுநலம் செய்யப் புறப்பட்ட ஒருவர்க்கு அறிவுகூட இரண்டாவதாகத்தான் தேவை. ஏனெனில் அறிவு என்பது, காலப் போக்கில், இட நிலைகளில் படிப்படியாகப் பெற்று, வளர்த்துக் கொள்ளக் கூடியது. அதனால்தான் அறிவுக்கு இரண் டாவது இடம் கொடுக்கப் பெற்றது. ஆள்வினைத் திறனே ஒருவர்க்கு இயற்கையாக அமையக் கூடியது.

www.thamizham.net - Free E book No 7514

எல்லாருக்கும், பொதுத்தொண்டு செய்யும் வேட்கை வரலாம். அகநிலையில் அதால் கிடைக்கும் குடிநன்மை அவர்களுக்குச் சரிவரத் தெரியாமற் போயினும், புறநிலையில் அதனால் கிடைக்கும் பெருமை, விளம்பரம், புகழ், பொருள், பதவி, அதிகாரம் முதலியற்றை விரும்பி, அவற்றுக்காகப் பொதுத் தொண்டு செய்யப் புறப்படுவார் பலருளர். அறிவுக் கூறுகளாகிய கல்வி, பட்டம் இவையே தம் வலிந்த தகுதி நிலைகள் என்று கொண்டு, அறிவு நிலையில் மேம்பட்ட அறிஞர் சிலர் சிலகால் பொதுத் தொண்டில் ஈடுபட வருவர். ஆனால், அவர்களுக்குப் பொதுத் தொண்டிற்கான முதல் தகுதியாகிய ஆள்வினையில்லாமற் போமாயின், அவர்கள் முயற்சி வெற்றி பெறாது என்பதையே இக்குறள் கூறுகிறது. இனி, குடிசெயல் வகையில் இது முதற் குறளாகையால், குடிநலம் செய்ய வருவான் ஒருவனுக்கு இவ் வாள் வினையே முதலில் வேண்டுவதாகும் என்பதையே இது வரையறுத்துக் கூறுகிறது. இவற்றையடுத்துப், பொதுத் தொண்டுக்கு நீள்வினை தேவை. எந்தக் கொள்கைக்காகப் பாடுபட முன்வருகிறோமோ, அக் கொள்கை வெற்றி பெற வேண்டுமானால், அதற்குரிய முயற்சிகள் நீளச் செய்யப் பெறுதல்—தொடர்ந்து செய்யப் பெறுதல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் ஒரு கொள்கைக்காக முயன்று, அதனை வெற்றி பெறச் செய்துவிடல் இயலாது. தொடர்ந்து, இடையீடின்றி, விடாமல், இறுதிவரை, அஃதாவது தொய்வில்லாமல் செய்து கொண்டேயிருத்தல் வேண்டும். இம் மூன்று இலக்கணங்களுக்கும் உட்படாத எந்தப் பொதுக் கொள்கையும் வெற்றி பெறுவதில்லை என்பதை நம் காலத்து வரலாறுகளே பலவும் நமக்குத் தெள்ளிதின் உணர்த்தும். தமிழினம் இன்னும் முற்றும் முன்னேறாமைக்கும், இம் மூன்றிலக்கணக் குறைபாடுகளே தலையாய கரணியம் என்று முதற்கண் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

எஃது, எவ்வாறாயினும், நம் இனமுன்னேற்றத்தில், இக்கால் விழுந்திருக்கும் பலவகையான தொய்வு நிலைகளைச் சரி செய்வதில் வலிந்த அறிவு முயற்சி தொடர்ந்து தேவை. அம் முயற்சியை அடியொட்டித்தான், பலவகையான கால, இட, வினை, பொருள், சூழல் ஆகியவற்றின் தீவிரமான ஆய்வுகளின் முடிவில், இந்த **'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்'** தொடங்கப் பெறுகிறது. இக்கால், தமிழ் நாடும், தமிழர்களும், அரசும் உள்ள சூழ்நிலையில், தனிப்பட்ட ஒருவர், அவர் எவ்வளவு பெரிய பேரறிஞராயினும் அவர் கூறும் எவ்வகையான பொது நிலைக் கருத்தும் ஒரு சிறிதும் எடுபடாது.

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும், நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். (1406)

என்பது முடியரசுக் காலத்தில் பொருளடிப்படையில் கூறப் பெற்ற தேனும், குடியரசுக் காலமாகிய இன்றை நிலையில், ஒரு குழுவைச் சாரமல் நிற்கும் ஒருவரின் தனிநிலையடிப்படையிலும் பொருந்து

www.thamizham.net - Free E book No 7514

மாறு பொருள் கொள்ளக் கூடியதே. தனிப்பட்ட நிலையில் நாம் சொல்லுகிற கருத்துகள் எவ்வளவு உயர்ந்திருந்தாலும் அவை கவனிக்கப்படா. அவை ஒரு கூட்டமாக நின்று சொல்லப் பெறல் வேண்டும். அதுவரை, அவை அரசினரின் மரச் செவிகளிலோ, பிறரின் ஆரவார நெஞ்சங்களிலோ சென்று சேரா ; சேரினும் ஏறா !

தென்மொழிக்கு ஏற்கனவே ஒரு வலிந்த கூட்டமுண்டு. ஆனால், அக் கூட்டம் ஒரு கட்டுக் கோப்பாக, ஒரு வடிவமைப்பாக இருந்ததில்லை. அதை அவ்வாறு செய்வதற்கும் நமக்கு நேரமில்லை. ஆனாலும், இக் கூட்டத்தைத்தான் பலரும் பலவாறாக இதுவரைப் பயன்படுத்திக் கொண்டு வந்தனர். ஊடுருவல் செய்து தங்கள் தங்கள் உணர்வுகளை விதைத்தனர். தென்மொழி மரத்திலேயே கத்தி தீட்டிக் கூர் பார்த்தவர்களும் சிலருண்டு. தென்மொழியை எவ்வாறேனும் வீழ்த்திவிட வேண்டும் என்று முனைந்தவரும் சிலர். இன்றும் கீழறுப்பு வேலைகள் நடந்து கொண்டுதாம் உள்ளன. நம்மின் உயர்ந்த கொள்கைகளையும், கண்டிப்பான கடைப்பிடிகளையும், கடுமையான வினையீடுபாட்டையும், மாறான பொருளில் இன்றும் வக்கணை பேசித் திரிபவர் பலர். பாவாணர்க்கும் நமக்கும் இறுதி நேரத்தில் வினை நிலையில், ஏற்பட்ட சிறு விரிசலைப் பெரிய சந்தாக்கி, அந்தச் சந்து முனையைத் தம் வணிக விளம்பரத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டவர்களும், கொள்பவர்களும் பலர் இருந்தனர் ; இன்னும் இருக்கின்றனர். இவர்களெல்லாரும் நமக்கு வெளிப்படையாக, மாறானவர்களோ பகைவர்களோ அல்லர். நண்பர்கள் என்று இன்றும் உரிமையுடன் வந்து, முகத்துக்கு முகம் நின்று நகையவிழப் பேசுபவர்கள்தாம். இவையெல்லாம் தென்மொழி அன்பர்களை ஒரு வகையில் ஒரியக்கமாகச் செய்யாத நிலையால் நேர்ந்த குளறுபடிகளும், கோளாறுகளும் ஆகும் இவற்றால் நமக்கு எவ்வகை நலிவுமில்லை யெனினும், கொள்கைகளுக்குச் சில தாழ்த்தங்கள் நேர்ந்தன.

எனவே, உடனடியாக ஓர் இயக்கம் தேவைப்பட்டது ; ஆகவே தொடங்கப் பெறுகிறது. இனி, இதுவரையில் இதை எட்டி நின்று நோக்கிக் கொண்டிருப்பவர்களுக்கும், ஏதோ ஒரு வகையில் தம்மளவிலேயே கணித்துப் பேசிக் கொண்டிருப்பவர்களுக்கும் சில கருத்துகளை முன் வைக்கின்றோம். அவற்றை நடுநிலை மனத்துடன் சிந்தித்து, இதனுடன் தொடர்பு கொள்வது பற்றியும் ஒத்தியங்குவது பற்றியும் தக்க முடிவெடுப்பார்களாக.

1. எந்த ஓர் இயக்கமும் எல்லார்க்குமே நிறைவு தருவதாக அமைய முடியாது. எல்லா இயக்கங்களையுமே கட்டாயத்தின் பெயரிலோ, கனிவின் பெயரிலோ ஓர் இயக்கமாக உருவாக்கினாலும், அதுவும் கூடிய விரைவில் உள்ளுடைவு கொண்டு, இரண்டாகவும், பின் நான்காகவும் எட்டாகவுமே பிரிந்து இயங்கும். ஏனெனில் உயிரியங்கியல் முறை அத்தகையது. எனவே, ஓடுகின்ற கால ஓட்டத்தில், நாம் உயிர்த்திருக்கின்ற நாள் வரையில், நமக்குப்

www.thamizham.net - Free E book No 7514

பெரும்பகுதியும் பொருந்திய இயக்கங்களுள் வலிந்த அமைப்பாகத் தென்படும் ஒன்றில் நம்மை இணைத்துக் கொள்வதே நல்லது. இல்லெனில், தனித்து நின்று, நாம் மட்டுமே ஓர் இயக்கமாக இயங்கி உயிர் கழிய வேண்டி இருக்கும்.

2. தொடங்க விருக்கும் உ. த மு. க. அரசியல் நலம், அல்லது ஊதியம் கருதுபவர்கள் தவிர தமிழின நலம் கருதும் அனைவரும் இணைந்து இயங்கத் தக்கது. தங்கட்கிருக்கும் தனிப்பட்ட கருத்தையெல்லாம் இது கொள்கையாகக் கொள்ளவில்லையே என்று எவரும் கருதுதல் கூடாது. இயன்றால் இயக்கத்தில் சேர்ந்து, அவர்களின் தகவான கருத்தை இயக்கத்தின் முன் வைத்துப் பொதுக் கொள்கையுடன் சேர்க்க முனையலாம். அதை விட்டுத் தனக்குப் பொருந்துவதான இயக்கத்தைத் தேடிக் கொண்டிருந்தால் என்றுமே எவருக்குமே பயன்படாமல் இருந்து இறுதியடைய வேண்டியதுதான்.

3. மொழி, இன, நாட்டு நல நோக்கு உடையவர்கள் அனைவரும் அங்கங்கே திட்டுத்திட்டாக நின்று கொண்டு, தனித்தோ, சிறு அளவிலோ இயங்கிக் கொண்டிருப்பது நம் கொள்கைச் செயற்பாட்டை மிகவும் பின்னுக்குத் தள்ளக் கூடியது. அந்நிலை நம் பொது எதிரிகளுக்கு வலுவாக அமையக் கூடியது.

4. அறிவியல் வளர்ச்சியில், கருத்துகளும் வளரக் கூடியவையே. கருத்துகள் வளரும் பொழுது கொள்கைகளும் விரிவடையலாம். ஆனால் சுருங்குவது இயக்கத்தின் நசிவையே விரைவுப்படுத்தும். எனவே, ஏற்கனவே ஒப்புக்கொண்ட, அல்லது வரையறுக்கப் பெற்ற ஒரு கொள்கையே அனைத்துக்கும் அனைத்துக் காலத்துக்கும் சரியென்று எண்ணிப், புறவளர்ச்சிகளுக்குக் கண்ணை மூடிக் கொள்வது, நம்மை நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருக்கச் செய்யும் கோட்பாடாகும். எனவே, நம் இயக்கம் ஏற்கனவே நிறைவுடையது ; இனி எந்தப் புது இயக்கத்தையும் நாம் திரும்பிப் பார்க்க வேண்டியதில்லை என்று இரும்புத்திரை போட்டுக் கொண்டிருப்பவர்கள் இக் கருத்தை மீண்டும் மீண்டும் சிந்திப்பார்களாக.

5. இனி, இறுதியாக ஒன்று. நம்மேல் தனிப்பட்ட முறையில், ஏதோ ஒரு வகையில்,வெறுப்பும் கசப்பும் உள்ளவர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு நாமோ, நமக்கு அவர்களோ, ஒருவருக்கொருவர் முற்றிலும், முழுமையாகப் பொருந்திய வகையில், ஒரே முகமுடையவர்களாக இருக்க முடியாது. நம் இருவரிலுமே என்றுமே பொருந்தாத பக்கங்கள் இருக்கலாம். நமக்குக் கிடைத்திருக்கும் உருவங்களைப் பார்த்தாலே அவை விளங்கும். பருப்பொருளளவிலேயே ஆயிரக்கணக்கான வேறுபாடுகள் தெரியும் பொழுது, நுண் பொருளவில் அவ் வேறுபாடுகள் கோடிக் கணக்காகவும், அதற்கு மேலும் இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.) எனவே, நம்மில் பொருந்தாத பக்கங்களை எதிரெதிராக வைத்துக் கொண்டு, இது போலும் அனைவர்க்குமே ஓரளவு உகந்த பொதுநல உணர்வுகளை,

www.thamizham.net - Free E book No 7514

என்றுமே நாம் புறக்கணித்து விடக் கூடாது. நம்மில் பொருந்தி வராத பக்கங்களைப் புறத்தே வைத்து விட்டுப் பொருந்துகின்ற பக்கங்களில் முகம் வைத்துப் பேசுவோம்; ஒருங்கிணைவோம்; பொருந்திய கருத்துகளை ஆராய்வோம்; அனைவர்க்கும் ஓரளவு ஒத்த வகையில் முடிவு செய்வோம்; அம் முடிவை நம் மொழி நலத்துக்கும் இன வளத்துக்கும் ஈடுபடுத்துவோம்; நீராகப் பயன்படுத்துவோம்; எருவாகத் தூவுவோம்; விளைவது தமிழின மறுமலர்ச்சியாக இருக்கட்டுமே! எண்ணிப் பாருங்கள். உங்கட்குச் சரி என்று பட்டால், உடனே கூட எங்களுடன் இணைந்து விட வேண்டா. மாநாட்டிற்கு வாருங்கள்: மனந்திறந்து கேளுங்கள்! தேவையானால் பொறுத் திருந்து. எம்முடன் தனித்துப் பேசுங்கள்! மீண்டும் எண்ணுங்கள்! ஊர் போய் இன்னும் நன்கு எண்ணுங்கள்! பிறகு உங்கள் விருப்பப்படி முடிவு செய்யுங்கள். இணைவதானால் இணைத்துக் கொள்ளுங்கள்! இல்லெனில் உங்கட்குச் சரியென்று பட்ட வகையில் இயங்குங்கள்! ஆனால், ஒன்று மட்டும் உண்மை, எழுதி வைத்துக் கொள்ளுங்கள்! நாம் இல்லாமற் போயினும் இவ் வியக்கம் மட்டும் என்றும் இருக்கும்! வினை செய்யும்! அஃது உறுதி!

6. எனவே, உ. த. மு. க. தொடக்க மாநாட்டிற்கு அனைவரும் வருக வருக என்று அன்புடன் அழைக்கின்றோம்!

— **பெருஞ்சித்திரனார்.**

---

நடைபெற விருக்கும்

**உ. த. மு. க. தொடக்க மாநாட்டில்**

இரண்டு நாள்களிலும்

தமிழீழ விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளரும்,
**உலகத் தமிழின விடுதலைக் கழக முன்னோடியும்,**
இலங்கைப் பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவரும் ஆகிய

**அமிர்தலிங்கம்** அவர்களும்,

அவர்கள் துணைவியாரும், தமிழீழ விடுதலைக் கூட்டணியின் மகளிரணித் தலைவரும், **உலகத் தமிழின விடுதலை மறத்தியும்**, ஆகிய

**மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும்**

கலந்து கொண்டு, சிறப்பிக்கின்றனர்.
அனைவரும் தவிராது, தவறாது கலந்து கொண்டு,
அவர்களின் அரிய கருத்துரைகளைக் கேளுங்கள்!

www.thamizham.net - Free E book No 7514

நிகழ்ச்சிச் சுருக்கம்

பேரன்புடையீர்,

வணக்கம். நடைபெற விருக்கும் 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாடு', துலை உஉ, உங (நவம்பர் 7, 8)-இல் சென்னை, எழும்பூருக்கு அருகில் உள்ள **பெரியார் திடலில்** மிகவும் சிறப்புடன் நடத்தத் திட்டமிடப் பெற்றுள்ளது. மாநாட்டு நிகழ்ச்சிகள் ஒருவாறு ஒழுங்குபடுத்தப் பெற்று வருகின்றன.

0 மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு, கட்சி வேறுபாடின்றித் தமிழினத் தலைவர்கள் அனைவரும் அழைக்கப் பெற்றுள்ளனர். ஆனால் அவர்களில் சிலரிடமிருந்து இன்னும் இசைவு வரவில்லை. பலரிடமிருந்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கான இசைவுகள் வரப்பெற்றுள்ளன.

0 மாநாட்டிற்குத் தமிழக முதல்வர் திரு. **ம. கோ. இராமச் சந்திரன்** அவர்களும், தமிழக அமைச்சர்களும், தி. மு. க. தலைவர் **கலைஞர். மு. கருணாநிதியும்** அழைக்கப் பெற்றுள்ளனர். இன்று-(3-10-81) வரையில் அவர்களிடமிருந்து எவ்வகை விடையுமில்லை.

0 மாநாட்டில் **முதல் நாள்** துலை உஉ (நவ. 7,) முற்பகல் மாணவர் அரங்க, நிகழ்ச்சியில் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளையும் சேர்ந்த முகாமையான மாணவர்கள் கலந்து கொண்டு, **மொழி, குமுகம், அரசியல், பொருளியல், கலை, பண்பாடு, அறிவியல்** — ஆகிய துறைகளில் உலகத் தமிழினம் முன்னேற வேண்டிய கருத்துகளை முன் வைக்கிறார்கள்.

0 அன்று பகல் இடைவேளையில், தென்மொழி அன்பர்கள் —

**ஆற்றலரசு, முருகவேள் குழுவினர்**

— இயக்கவுணர்வுப் பாடல்களை, இசைக் கருவிகளுடன் பாடி, எழுச்சி அலைகளை எழுப்பவிருக்கின்றனர்.

www.thamizham.net - Free E book No 7514

o அன்று பிற்பகல், 'மகளிர் மாநாடு' நடைபெறும், அம் மாநாட்டிற்கு; இலங்கையிலுள்ள

தமிழீழ விடுதலைக் கூட்டணியின் மகளிரணித் தலைவரும், தமிழின விடுதலைமறவர் திரு. அமிர்தலிங்கத்தின் துணைவியுமாகிய,

திருவாட்டி.

**மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்**

தலைமை தாங்குகிறார். நிகழ்ச்சியில், பேரா. சாலினி இளந்திரையன் உட்படப் பலர் கலந்து கொள்கின்றனர்.

o அன்று இரவு 9 மணியளவில், குழந்தைகள்

**நற்செல்வி, செங்கதிர்ச் செல்வி, அங்கயற்கண்ணி**

ஆகியோரின் 'வீரத்தாய்' நடிப்புரைக் காட்சி நடைபெறும்.

o அதே நாளன்று இரவு 10 மணியளவில்,

இசையமைப்பாளர்கள்.

**சிறிபதி, தியாகராசன்** (திருச்சி உலகநாதன் அவர்களின் மகன்) குழுவினர் பல்வகைக் கருவிகளுடன் இயக்க மெல்லிசைப் பாடல்களைப் பாடி மகிழ்விப்பர்.

o துலை உ௩ (நவ. 8) இரண்டாம் நாள் முற்பகலில், **'தமிழின நலக் காப்பு'** மாநாடு நடைபெறும்.

o மாநாட்டிற்குத் தமிழீழ விடுதலைக் கூட்டணிப் பொதுச் செயலாளரும், இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமாகிய

திரு. **அமிர்தலிங்கம்**

தலைமை தாங்குகிறார். நிகழ்ச்சியில்,

பேரறிஞர், பன்மொழிப் புலவர்

திரு. **கா. அப்பாத்துரையார்**

ஆட்சிமொழிக்காவலர்

திரு. **கீ. இராமலிங்கனார்**

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர்,

மானமிகு. **கி. வீரமணி**

பெரியார் பேருரையாளர் பேரா. **ந. இராமநாதன்**

**ஈழவேந்தன்** பேரா. **சி. பாலசுப்பிரமணியம்**
பேரா. **சாலை இளந்திரையன்** **முகவை இராசமாணிக்கம்.**
**மீ. சு. இளமுருகு பொற்செல்வி.** பேரா. **மு. ச. சிவம்.**

முதலிய அறிஞர்கள் பலரும் கலந்து கொள்கின்றனர்.

o அன்று பிற்பகல் நடைபெற விருக்கும் உலகத் தமிழின முன்னேற்றக் கழக மாநாட்டில்,

'சிந்தனையாளன்' ஆசிரியர்

திருச்சி. **வே. ஆனைமுத்து** வழக்கறிஞர், **இரா. கஸ்தூரி**
பேரா. **கு. வெ. கி. ஆசான்** உவமைப் பாவலர், **சுரதா**

www.thamizham.net - Free E book No 7514

o மற்றும், வெங்காலூர். குணா
வழக்கறிஞர். கு. ச. ஆனந்தன்
பேரா. தமிழ்க் குடிமகன்
பேரா. இரா. இளவரசு
பேரா. பொற்கோ பேரா. முத்துக் குணசேகரன்
'குறளியம்' ஆசிரியர், வேலா அரசமாணிக்கனார்
பேரா. இறையன் வழக்கறிஞர். ப. பத்மநாபன்
மூலிகை மணி. க. வேங்கடேசன் புலவர். தி. நா. அறிவுஒளி
புலவர். த. ச. தமிழன் முதலியோர் கலந்து கொள்கின்றனர்.

o மற்றும், இயக்க முன்னணியினர், மருத்துவர். கோவிந்தனார், புலவர். இறைக்குருவனார், தென்மொழி மறை. நித்தலின்பனார், அரு. கோபாலன், மணவைத் தம்பி, வழக்கறிஞர். ப. அருளி, தென்மொழி ந. முத்துக்குமரன், தென்மொழி ப. துரையரசன், அறிஞர். அரசிறைவன், புலவர். பழனிமாணிக்கம், பாவலர். குமர நடவரச ஈவப்பன், தென்மொழி. ந. இளமாறன், பாவலர். தமிழ்க் குமரன், தென்மொழி. க. தமிழப்பன், தூத்துக்குடி. த. முல்லைவழுதி, தென்மொழி. கி. பாலு. தென்மொழி இராவணன் — முதலியோர் பங்கேற்கின்றனர்.

o மாநாட்டில் வெளிநாட்டுப் பேராளர் பலரும் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப் படுகின்றது.

o நான்கு நிகழ்ச்சிகளின் முடிவிலும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் சிறப்புரை இருக்கும்.

o மாநாட்டின் இறுதியில் நடைபெற விருக்கும் உ. த. மு. க. அமைப்பு நிகழ்ச்சியில் அனைவரும் கட்டாயம் பங்கு கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம்.

o பிற விளக்கங்களைப் பிற பக்கங்களிலும், மாநாட்டு முழு நிகழ்ச்சி நிரலை அடுத்த இதழிலும் காணலாம்.

o தமிழன்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மகளிர்கள் அனைவரும் நண்பர்களுடனும் குடும்பத்துடனும் தவறாமல் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டிக் கொள்கிறோம்.

---

## மாநாட்டுச் சுவரொட்டிகள்

மாநாட்டுக்கான இருவண்ணச் சுவரொட்டிகள் அன்பர்களுக்கு 20-10-81-க்குப் பின்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்பெறும். அவற்றை நவம்பர் 3, 4-ஆம் பக்கல்களில் ஆங்காங்குப் பரவலாகப் பொதுமக்கள் பார்வை படும்படி ஒட்டி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். — மாநாட்டு அணியினர்.

www.thamizham.net - Free E book No 7514

# பெருஞ்சித்திரனார் 'பிடிவாதக்காரர்' சாலையார் 'முரட்டுப் பிடிவாதக்காரர்'

தமிழக அரசு அமைத்திருக்கின்ற 'உலகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில்' — அமைந்து வரும் 'வளர் தமிழ்ப் புலத்தில்' அமர்த்தம் செய்யச் சொல்லி, நம் பெயரையும், தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் சாலை இளந்திரையன் அவர்கள் பெயரையும், நல்லவர் சிலரும் அதிகாரிகள் சிலரும் அரசுக்குப் பரிந்துரை செய்தனராம். அதற்கு, நம் தமிழ்நாடு செய்த 'தவப்பயனால்' அமைச்சர்களாகவும் முதலமைச்சராகவும் வந்து வாய்த்த 'தமிழறியும் பெருமாள்கள்' —

'பெருஞ்சித்திரனார் 'பிடிவாதக்காரர்' அவரை அமர்த்தம் செய்தால், எந்த வேலையும் செய்வதற்குத் தடையுண்டாகும்' — என்றும்,

'சாலை இளந்திரையன் 'முரட்டுப் பிடிவாதக்காரர்' அவரைச் சேர்ப்பதும் சிக்கலானது' — என்றும்,

திருவாய் மலர்ந்து, கருத்தறிவித்து, அவ்வறிவுரைகளையும் பரிந்துரைகளையும் புறந்தள்ளி விட்டனர்களாம் — என்று கேள்விப்படுகிறோம். செய்தி உண்மையானால் அது நமக்குப் பெரிதும் வியப்பாயில்லை; இயல்பான செய்தியே அது.

'பிடிவாதம்' என்பது தாழ்ந்த ஓர் உணர்வன்று. அறிவு நிலையிலும், கொள்கை நிலையிலும், வினை நிலையிலும் அவ்வுணர்வு மிகவும் தேவையான ஓர் உயர்ந்த உணர்வேயாகும்.

இன்னும் சொன்னால், 'பிடிவாதம்' பெருமைக்குரிய — பொது நலம் கருதும் நல்லவர்களுக்கு, வல்லவர்களுக்கு, செயற்கரிய செய்ய விரும்பும் 'பெரியார்'களுக்குக் கட்டாயம் தேவையான இன்றியமையாத ஒரு செயலுணர்வாகும். அஃதில்லாத உண்மையான தலைவர்களையோ அறிவியலறிஞர்களையோ, மெய்யறிவாளரையோ, பொதுநலத் தொண்டர்களையோ காட்டுவது மிகவும் அரிதாகும். 'பிடிவாதம்' இல்லையானால் சாக்ரட்டீசு இல்லை; புத்தர் இல்லை; ஐன்சுடீன் இல்லை; எடிசன் இல்லை; காந்தியடிகள் இல்லை; பெரியார் இல்லை. ஏன் எந்த நல்லாக்கமுமே இல்லாமல் போயிருந்திருக்கும்.

'மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ, உன்னையறிந்தோ தமிழை ஓதினேன்; என்னை, விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ? உண்டோ, குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு?' — என்ற பிடிவாதவுணர்வு கொண்ட, பணத்திற்கும் பதவிக்கும் மன நெகிழ்ச்சி கொள்ளாத கம்பன்தான் இன்றைக்குத் தமிழில் மிகவுயர்ந்த பாவியப் பாவலனாக உள்ளான்! பிடிவாதக்காரன்தான் மானமுள்ளவனாக விருப்பான்; நேர்மையாளனாகவும் இருப்பான்!

வாழ்வியல் நிலையில்தான், அதுவும் சிற்சில அன்பு நிலைகளில் தான், அஃது ஒரு தேவையான உணர்வென்று கருதப்படுவதில்லை. ஆனால் அங்கும்கூட, தாழ்ந்த உணர்வாகி விடாது. பொது நிலையில்

www.thamizham.net - Free E book No 7514

பணத்தைக் கூட்டுக் கொள்ளையடிக்க விரும்பும் 'தான் தின்னி'களுக்கு வேண்டுமானால் அது தேவையில்லாத உணர்வாக இருக்கலாம்.

ஆனால், ஒரு கொள்கையை நன்கு ஆய்வு செய்து, தவறானால் மக்கள் பொதுப் பணத்தைத் தங்கள் வீட்டுப் பணம் போல் தங்கு தடையின்றித் தாராளமாகத் தமிழ் என்னும் பெயரால் வாரியிறைக்கத் தடையாயிருப்பவர்கள் 'பிடிவாதக்காரர்கள்' அல்லது 'முரட்டுப் பிடிவாதக்காரர்கள்' என்றால்,

'அமைச்சர்களே! எல்லாவற்றிலும், ஏதன் பெயரையாவது சொல்லிக் கொண்டு, நீங்கள் எடுத்து விழுங்கும் தொகைகளையும், வாரியிறைக்கும் மக்கள் வரிப்பணத்தையும், நெளிந்து, குழைந்து, தங்கள் பதவிகளை நிலைநிறுத்திக் கொள்ளும் பொருட்டுக் குனிந்து, விட்டுக் கொடுத்து அல்லது கண்டு கொள்ளாமல் போவோர்தாம் உங்களுக்கு வேண்டும் போலும்! உங்கள் அகர வரிசையில் அவர்கள்தாம் நல்லவர்கள்! — போலும்!

அவ்வாறு செய்யாதவர்கள் வல்லவர்களானாலும் பிடிவாதக்காரர்கள்! வாய்மையாளர்களானாலும் முரடர்கள்! குருடர்கள்! நேர்மையும், திறமையும், உண்மையும் உங்களுக்கு நேர் எதிரிகளா?

ஏய்ப்புகளும் மேய்ப்புகளும் உங்களுக்கு எடுபிடிகள்! கட்டுக் காவல்கள் உங்களுக்குப் பிடிக்காதவை! தட்டிக் கேட்பது நீங்கள் விரும்பாதது! — இல்லையா, அமைச்சர்களே?

செவி கைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைமை உங்களுக்குத் தேவையில்லை!

இடிக்குந் துணையாரை நீங்கள் விரும்புவதில்லை!

உற்றநோய் நீக்கி, உறாமை முற்காக்கும் பெற்றியரை நீங்கள் பேணிக் கொள்ளத் தேவையில்லை!

சிறுமைதான் சுற்றமாச் சூழ வேண்டும், உங்கட்கு!

காதன்மை கந்தா, அறிவறியார்த் தேறுதல்

பேதைமை யெல்லாம் தரும் — என்னும் அறிவுரையை எந்த நிலையிலும் நீங்கள் ஏற்றுக் கொள்வதில்லை!

நீங்கள் குதிரை ஏறும்படி, குனிந்து கொடுக்கத் தெரியாதவர்கள், துணிந்தவர்களானாலும் அவர்கள் உங்கள் கண்களுக்குப் பிடிவாதக்காரர்கள்! வழவழா கொழகொழாக்கள் உங்கள் பார்வையில் பேரறிஞர்கள்!

நீங்கள் தான்தோன்றித்தனமாக இயங்க வேண்டும்! அதற்கு உங்களால் அமர்த்தப்படுபவர்கள் பல்லிளிக்க வேண்டும்! பக்கத் தாளம் போட வேண்டும்! அப்பொழுதுதான் அவர்கள் அறிஞர்கள் என்று நீங்கள் ஒப்புவீர்கள்! புலவோர்கள் என்று உங்கள் பல்கலைக் கழகப் 'புலங்கள்' ஒப்பும்.

www.thamizham.net - Free E book No 7514

உங்கள் திரை மறைவுக் கதைகளைத் தெருவில் போட்டு உடைப்பவர்கள்தாம் உங்கள் அரசவைப் பாவலர்களாக வரமுடியும் என்ற செப்படியாட்டம் நாங்கள் அறியாதது!

நீங்கள் தமிழை வளர்க்கிறீர்களா? அல்லது தமிழால் உங்களை வளர்க்கிறீர்களா? — என்பது மட்டுமே நாங்களறிய வேண்டுவது!

அடியுங்கள்! அடியுங்கள்! கொள்ளையடியுங்கள்! தமிழின் பெயரைச்சொல்லி நன்றாகக் கொள்ளையடியுங்கள்! உங்களுக்கு விளக்குப் பிடிப்பவர்களையே அக் கொள்ளைக்குக் காவலர்களாக வையுங்கள்!

பெருஞ்சித்திரனாரையும், சாலை இளந்திரையனாரையும் உங்கள் மடிகளில் கட்டிக் கொள்ள உங்களுக்குத் தலைப்பித்தமா? அல்லது மண்டைக் கொழுப்பா — என்ன?

உங்களைச் சுற்றி அவர்களை அமர்த்திக் கொண்டு, அவர்கள் கேட்கும் வினாக்களுக்கு விடைகள் சொல்லிக் கொண்டிருக்க உங்கள் நெஞ்சில் உரன் இருக்குமா? அல்லது உண்மைதான் இருக்குமா?

உலகத் தமிழ் மாநாடு நடத்தினீர்கள்!
உங்கள் வீட்டுக் கொல்லைகள் மணந்தன!

இனி, ஏறிய பதவிகளிலிருந்து, இறங்குகின்ற நேரத்திற்குள், உங்கள் ஆசைக் கனவுகள் நிறைவேறப் **பல்கலைக் கழகம்** என்னும் பெயரால், நீங்கள் அடிக்கும் பகல் கூத்துக்கும், பட்டப்பகல் கொள்ளைக்கும், உங்கள் மயிர் முளைக்காத வழுக்கைத் தலைகளில் நீங்களே சூட்டிக் கொள்ளப் போகும் மகுடங்களுக்கும், உங்கள் கூட்டாளிகளையே பக்கத் துணைவர்களாக வைத்துக் கொள்ளுங்கள்!

போகட்டும் இலக்க இலக்கங்கள்! புழங்கட்டும் கோடி கோடிகள்!
மக்கள் வரிப்பணந்தானே அது! புகுந்து விளையாடுங்கள்!
போகப் போகத் தெரியும், மக்களுக்கு! — உங்கள்
புன்மை யறிவுகளும், பகற் கொள்ளைகளும்!

ஐயகோ, தமிழே! உனக்கு, அழிம்பர்கள்தாம் சொந்தக்காரர்களா? அடுத்துக் கெடுப்பவர்கள்தாம் பல்கலைக்கழகப் பேராசிரியர்களா?

கண்ணதாசன்களே! உங்களுக்குத்தான் வெளிச்சம்!
வீரப்பன்களே! உங்களுக்குத்தான் பூச்சக்கரக் குடை!
காலமே! நீதான் தீர்ப்புக் கூற வேண்டும்!

திரைமறைவுச் செய்திகள் தெருநடுவிற்கு வரட்டும்!
புரைபிடித்த பொய்யர்கள் போக்குகள் விளங்கட்டும்!
சுரைஉலர் குடுக்கைகளே, சுண்ணாம்புச் சட்டிகளே,
இரைபிடிக்கும் கொக்குகளாய் எந்தமிழைக் காக்கட்டும்!

சிறியார் உணர்ச்சியுள் இல்லை, பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு. (976)

www.thamizham.net - Free E book No 7514

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்.

## அமைப்பு முறைகள் பற்றிச் சில விளக்கங்கள்

### பெருஞ்சித்திரனார்

**அமைப்பாளர்.**

1. சென்ற கடகம் 10 (சூலை 25)-இல், திருச்சியில் கூடிய தென்மொழி அன்பர்கள் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்தபடி, **'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்'** என்றோர் இயக்கம் தொடங்குவதென்று தீர்மானிக்கப் பெற்று, அதன் தொடக்க மாநாடு, வரும் துலை உஉ, உரு (நவம்பர் 7, 8) இல், சென்னையில் நடைபெறுவதற்குரிய அனைத்து முயற்சிகளும் நடந்து வருகின்றன. இக் கழகத் தொடக்கத்திற்குத் தமிழ் நாட்டிலிருந்தும், பிற வெளிநாடுகளிலிருந்தும் ஆதரவு காட்டி அறிஞர்களும் அன்பர்களும் மடல்கள் விடுத்த வண்ணம் உள்ளனர்.

2. உலகத் தொடர்புள்ள ஓர் இயக்கத்தைக் கட்டமைப்பது என்பது அத்துணை எளிய செயலன்று என்பதை நாம் நன்கு அறிவோம். இத்தகைய ஒரு பேரினத்திற்கு அகத்தும் புறத்தும் இயல்பாகவே தோன்றும் சடைவுகளையும், இடையூறுகளையும், பூசல்களையும், மன, மொழி, வினை, ஆகியவற்றில் தோன்றும் முட்டுக்கட்டைகளையும், இகழ்ச்சி, எள்ளல் உரைகளையும், இகல்களையும் பகைகளையும், பொருள் முட்டுப்பாடுகளையும் படிப்படியாக வென்றெடுத்து, முழு வடிவான ஓர் இயக்க அமைப்பை உருவாக்குவதென்பது மணலில் மட்கலம் செய்வது போலும் ஓர் அருஞ் செயலாகும். இருப்பினும்,

> அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
> பெருமை முயற்சி தரும். (611)
>
> பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
> அருமை உடைய செயல். (975)
>
> இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
> துன்பம் துடைத்தூன்றும் தூண். (615)

என்னும் பொய்யாமொழிகளுக்கு ஏற்ப, இவ்வரிய வினையுள் நம்மை நாமே, துணிந்து ஈடுபடுத்திக் கொண்டுள்ளோம்.

3. நாம் ஏற்கனவே எண்ணி முடிவுகட்டியுள்ள சில அரிய இலக்கியங்களை இயற்றுவதிலும், 1976-ஆம் ஆண்டில் தொடங்கிய **'திருக்குறள் மெய்ப்பொருளுரை'** என்னும் ஓர் அரிய பெரிய நூலை ஆக்கித் தருவதிலும், இத்தகைய ஓர் இயக்க அமைப்பால், ஒரு பெரிய இடைத் தளர்வு ஏற்படும் என்பதை நன்கு அறிந்திருந்தும், இவ்வினையில் நாம் ஏன் திடுமென இறங்கினோம் என்றால், இக்கால் தமிழகத்தில் தோன்றியுள்ள சிற்சில அரசியல் உட்பூசல்களும் உணர்வுக் கேடுகளும், புறநலச் சேதங்களும், தமிழர்கள் வாழ்கின்ற அயல் நிலங்களில் அவர்களுக்கு ஏற்பட்டு வரும் வாழ்வியல் கொடு

www.thamizham.net - Free E.book No 7514

மைகளும், இன அழிவுகளும் நம்மை மிகவும் அச்சுறுத்தியதாலும், நெஞ்சு நோகும்படி செய்ததாலும், எங்கு நம் தமிழினம் காலச் சூருவளியில் சிக்கிச் சிதறுண்டு போய்விடுமோ என்று கவலைப்பட்டதன் விளைவாகவே ஆகும் என்பதை என்னைச் சுற்றியுள்ள மெய்யன்பர்கள் நன்கு அறிவர். மற்றபடி,இத்தகு அருமைவினையை நாம்-தாம் செய்ய முடியும் என்றோ, நம்மை விட்டால் வேறு எவரும் செய்யத் தகுதியற்றவர் என்றோ, கொண்ட தன்முனைப்பாலோ, மனச் செருக்காலோ அல்லது ஓர் மனவெழுச்சியினாலோ அன்று. நாம் இன்றும், அன்றும், என்றும், திருக்குறளின் அத்தனை அறிவுரைகளையும் நினையாமற் போயினும்,

> உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
> இடைக்கண் முரிந்தார் பலர். (473)
>
> அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
> அஞ்சல் அறிவார் தொழில். (428)

என்னும் இரண்டு மெய்யுரைகளையும் அடிக்கடி நெஞ்சு நேர்ந்து கொள்வது இயல்பாகும். இனி, இத்தகு ஓர் இயக்கம் நம்மைவிட, மிகுந்த அறிவும், வினைமேம்பாடும், தூய தமிழ்ப் பற்றும், பொதுமை நோக்கும், செயல்துணிவும், தன்னல மறுப்பும், பொதுநல விழைவும், அஞ்சாமையும், இடைவிடா ஊக்கமும், பொருள் தகுதியும், அதிகார வல்லமையும் கொண்ட தூய்மையாளர் ஒருவரால் தொடங்கப் பெறுவதாக விருப்பின், இஃது இன்னும் பன்மடங்கு சிறந்த ஓர் அமைப்பாக உருவாவதற்கு ஏற்ற வாய்ப்புகள் உண்டு. ஆனால் ஒன்றிருப்பின் மற்றொன்றில் தாழும் மனநிலையும் வினைநிலையும் உள்ளவர்களே மிகுந்திருக்கும் இக்கால நிலையில், வேறு எவரும் இதுபோலும் ஓர் இயக்க அமைப்பிற்குத் தம் முழு முனைப்பும் காட்டாத ஓர் இக்கட்டான அவலச் சூழலிலேயே நாம் இதனைத் தொடங்குதற்கு எண்ணங் கொண்டோம்.

4. இவ்வெண்ணத்தால் அன்பர் குழுவைக் கூட்டி, நிலைகளை ஆராய்ந்து, ஓர் இயக்கம் தொடங்கிவிட முடிவு செய்து, நாள் குறித்து, இடம் அமர்த்தி, அறிக்கைகள் அச்சிட்டு, இதில் கலந்து கொள்ள வேண்டிய அன்பர்களையும் அறிஞர்களையும் தலைவர்களையும் அழைப்பதற்குரிய அழைப்பு மடல்களையும்,நன்கொடைப் பற்றுமுறிகளையும் அணியமாக்கி வெளிப்படுத்திய பின்னர், அவ்வழைப்பையும் அறிக்கைகளையும் நம் செயற்குழுவின் வழி, நேரில் பெற்றுக் கொண்ட தி. மு. கழகத் தலைவர் கலைஞர், தாம் பம்பாய் சென்றவிடத்து, அங்கே நடந்ததோர் சிறப்புக்கூட்டத்தில், பொத்தாம் பொதுவில், உலகந் தழுவிய தமிழ்ப் பேரியக்கம் ஒன்று தோற்றுவிக்கப்பெற வேண்டும் என்றும், அதற்குரிய வித்தை அவர் பேசிய அக்கூட்டத்தில் ஊன்றுவதாகவும் கூறிய செய்தியைத் தாளிகை வழி யறிந்து மிகவும் நெஞ்சு துணுக்குற்றோம். இச் செய்தியைச்

www.thamizham.net - Free E book No 7514

செய்தித்தாள் வழியாக முன்னறிந்து, நமக்குப் போதிய விளம்பர ஏந்துகளின்மையால், நம் இயக்கத் தொடக்கம் பற்றிப் பின்னறிய நேர்ந்தவர்கள், நாம்தாம் கலைஞர் கருத்தை ஊடறுத்துக் குறுக்கு வினையாற்ற முற்பட்டதாகத் தவறாக உணர்வதற்கும் ஒரு வாய்ப்புண்டாகையால், நாமிதனை இங்கெடுத்து விளக்கவேண்டி வந்தது என்க.

5. இனி, நமக்குக் கலைஞர்மேலோ, அல்லது தமிழகத்தில் உள்ள வேறு எந்தத் தமிழினத் தலைவர்மேலோ, தமிழுக்கும், தமிழினத்திற்கும், தமிழ் நிலத்திற்கும நலஞ் செய்ய வேண்டும் என்னும் பொதுநல நோக்கில், எவ்வகையான போட்டியோ, பொருமையோ, அழுக்காறோ ஒரு சிறிதும் இதற்கு முன்னர் ஏற்பட்டதுமில்லை; இனி ஏற்படப் போவதுமில்லை. அவ்வப்பொழுது மொழி, இன நலம் நோக்கி நாம் வெளியிடும் கருத்துகளால், சிலர்க்குச் சில தாக்கங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அவை முற்றும் தன்னலம் ஒரு சிறிதும் கலவாத நடுநிலை நெஞ்சத்தினின்று கால, இட, வினைத் தேவை கருதி வெளியேறிய கருத்துகளேயன்றி, வேறு எப்பயனோ பெருமையோ கருதி வெளியிட்ட கருத்துகளல்ல என்பதை நடுநிலை நெஞ்சங்கள் நன்கு உணரும்.

6. இனி. இதுவரையில், பாவாணர் தலைமையில் தென்மொழி வழி, தொடக்கத்தில் அறிமுகப்\ படுத்தப் பெற்ற, உலகத் தமிழ்க் கழகத்திற்கு அதன் முதற்பொதுச் செயலாளராக விருந்து நாம் செயலாற்றி வரும் பொழுது, அதன் அமைப்புக் களம் மொழியளவில் மட்டுமே நின்று, நம் முழுக்கொள்கைகளின் பரப்புக்கும் ஏற்ற அளவில் பொருந்துவதாயிராமல் இருந்தமையால், அது தொடங்கிய ஈராண்டுக்குள் அதன் செயற்பாடுகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொண்டாலும், பாவாணரின் ஆசிரிய முகங்கருதி, அவர் உயிருள்ள வரை, அவரினின்று நீங்கி வேறுபட்டு, அவர் கண்முன்னேயே வேறோர் இயக்கம் காண ஒருப்படாத நம் நன்னெஞ்சால், நம் கொள்கைப் பரப்புக் கேற்றவாறு ஒரு புத்தியக்கம் தொடங்கப் பெறுமலேயே இருந்தது. இக்கால், அவர் மறைவுக்குப்பின், அவ் உ. த. க. அளவிலேயே தம்மை நிலை நிறுத்திக் கொண்டு, அதன் உயிர்ப்பிலேயே தம் காலத்தையும் நடத்தி விடும் எண்ணங்கொண்ட ஒரு சிலர், ஒப்புக்கு அவ்வியக்கம் இருப்பதாகச் சிற்சில அறிவிப்புகளை அப்பொழுதைக்கப்பொழுது வெளிப்படுத்திவந்தாலும், உலகளாவிய தமிழரின் முழுஇணைப்புக்கும் முன்னேற்றத்திற்கும் அது பொருந்தி வராதாகையால், அதனினும் விரிந்த அடிப்படையில், வலிந்த ஓர் இயக்கத்தைத் தொடங்கவே வேண்டிய கட்டாயம் நமக்கேற்பட்டது. (உ. த. க. நம் கொள்கைப் பரப்புக்கு எவ்வாற்றானும் அகன்று விரிய இடங்கொடாமையால்தான், நாம், 1974-இல் சிங்கையினின்று தமிழகம் திரும்பிய பொழுதிலும், பாவாணர் அரசுப் பொறுப்பில் அமர்த்தம் பெற்ற நிலையிலும், நம்மை அதன் தலைமைப் பதவியை ஏற்றுக்

www.thamizham.net - Free E book No 7514

கொள்ளக் கேட்டபொழுது, நாம் அதனை ஏற்க இயலாமை கூறி மறுக்க நேரிட்டது.) மற்றபடி, ஓரிருவர் கூறுமாறு, உ. த. க. வைப் புறக்கணிக்க வேண்டும் என்பதோ, அதனை இருட்டடிப்புச் செய்ய வேண்டும் என்பதோ நம் கொள்கையன்று. உண்மையைச் சொல்வதானால் அதை வெளிச்சப்படுத்தியதே தென்மொழிதான்! இற்றைக்கு அஃது உள்ள இடமும் ஓரிருவரின் வீடே தவிர, நாடன்று! பாவாணரே உ. த. க. வின் வாணாள் தலைவர் என்பதை நாம் அன்றே அவரிடமும் சொன்னோம்; அனைவரிடமும் சொன்னோம். அவர் போல் உள்ளவர் தவிர, வேறு எவரும் அதற்குத் தலைவராதல் இயலாததும் ஏற்க முடியாததுமாகும் என்பதையும் அவரிடம் அப்பொழுதே அழுத்தந்திருத்தமாகக் கூறியுள்ளோம். இன்றோ அவர் இல்லை. எனவே தலையில்லாமல் வால் ஆடுவதில்லை. ஆகவே, புதிய இயக்கம் காலத்தின் வலிந்த தேவையாகி விட்டது. இதனை அனைவரும் மனக் கோட்டமின்றி எண்ணிப் பார்த்தல் வேண்டும். 'உ. த. க. என்று ஒன்றிருந்தது. அது பாவாணர்க்காக இருந்தது' என்பதே அவர்க்குப் பெருமை தரும் வரலாற்று வரியாகும்.

இனி, உ. த. க. என்னும் பெயரைச் சிறிது மாற்றிப் புத்தியக்கத்திற்குப் பெயர் தரப் பெற்றது என்பது, நன்மனத்தால் எழுந்த தீர்ப்பன்று. தி. க. வினின்று தி. மு. க. தோன்றிய பொழுது பெரியாரும், தி. மு. க. வினின்று அ. தி. மு. க. தோன்றிய பொழுது கலைஞரும், அவற்றை இவ்வாறு வழுக்கியும் வாயாற் கூறவில்லை. மேலும், உலகம் என்னும் சொல்லும், **தமிழினம்** என்னும் சொல்லும், **முன்னேற்றம்** என்னும் சொல்லும், **கழகம்** என்னும் சொல்லும்-தமிழர் அனைவர்க்குமே உரிய பொதுச் சொற்கள். ஒருவரின் தனியுடைமை அல்லது தனி உரிமைச் சொற்கள் அல்ல. மிகுந்த ஆய்வுக்குப் பின்னரே இக் கழகப் பெயர் அமைந்தது. அதன் முன்னேற்றத்தில் விருப்பமில்லாதவரே, அப்பெயரமைப்பில் மாசு கற்பிப்பர். மேலும் உ. த. க. என்னும் பெயரும் பாவாணர்க்கு நம்மால் சொல்லப் பெற்றதுதான் என்பதையும், அதன் நெறிமுறைச் சுவடியும், முழுமையும் நம்மால் எழுதப் பெற்றதுதான் என்பதையும், தாறுமாறாகச் செய்திகளையும், தமிழன்பர் சிலர் மனங்களையும் திரிக்க முற்படும் பிற்றைநாள் உ.த.க. தொடர்பாளர்கள் உணர்ந்து கொள்வார்களாக.

7. எனவே, இவ்வாறான பலவேறு, மாறான சூழ்நிலைகள் அமைந்தாலும், நாம் முன்னரே திட்டமிட்டபடி, எவ்வகைத் தயக்கமும் மயக்கமுமின்றி, நம் இயக்கத் தொடக்க மாநாட்டுக்குரிய வினைகளிலும், இயக்க அமைப்புகளிலும் முழுக்கவனம் செலுத்தி வருதலே, நமக்குத் தக்கதும், சரியானதும் ஆகும் என்றபடி, முயற்சிகள் நடந்து வருகின்றன. அப் பலவாகிய முயற்சிகளுள் இயக்கத்தைக் கட்டமைப்பதும் ஒன்று. இஃது அருமையும் பெருமையும் மிக்கதோர் இன்றியமையாத செயலாகும் என்பதை ஏற்கனவே பொது இயக்கங்களில் ஓரளவு தொடர்பு கொண்ட அன்பர்கள் நன்கு அறிவர்.

www.thamizham.net - Free E book No 7514

8. இனி, உ. த. மு. க. தொடங்குவதாக அறிவிக்கப்பட்ட பொழுதே, அதன் எழுநிலைக் கொள்கைகளும் வரையறுக்கப் பெற்று வெளியிடப் பெற்றன. அக் கொள்கைகளின் விளக்கங்களும், அவற்றை நடைமுறைப் படுத்தும் செயல் திட்டங்களும் அவற்றை உள்ளடக்கிய உ. த. மு. க. நெறிமுறைகளும் அடங்கிய விரிவான கொள்கை யறிக்கை (Manifesto), மாநாட்டையடுத்து அமைக்கப் பெறும் பல்வகை அறிஞர்களும் அடங்கிய நெறிமுறைக் குழுவின ரால் ஆய்ந்து தேர்ந்து, நடைமுறையாண்டின் இறுதிக்குள் பொத்தக வடிவில் அச்சிட்டு வெளியிடப்பெறும். நெறிமுறைக் குழுவில் அடங்கிய அறிஞர்களின் பெயர்கள், மாநாட்டு இறுதியில் அமைப் பாளரால் அறிவிக்கப் பெறும்.

9. கழகத்தின் கொள்கையறிக்கை வெளிப்பாட்டுக்குப் பின்னரே கழக அமைப்பு இறுதியும் உறுதியும் படுத்தப் பெற்றுக் கழக **நெறியாளர்** அல்லது **இயக்குநரால்** அறிவிக்கப் பெறும். அதனை யடுத்துத் தலைமைக் கழக அமைப்பும் அலுவலகமும் நிறுவப்பெறும். அதன் பின்னரே படிப்படியாக மாவட்ட அமைப்புகளும், வட்ட அமைப்புகளும், ஊர்க்கிளைகளும், மாநில அமைப்புகளும், அயல் நாட்டு அமைப்புகளும் நிறுவப் பெறும். இவ் வனைத்து நிலைகளி லும் ஏற்படுத்தப் பெறும் **முதல் அமர்த்தம்** கழக நெறியாளர் அல்லது இயக்குநரின் தனித் தேர்வுக்கும், அதனை யடுத்த அமர்த் தங்கள் பதவி யாண்டுகளின் முடிவில் பொதுத்தேர்வுக்கும், கழக நெறிமுறைகளில் காணப்பெறும் நெறிமுறைக்கும் ஒத்த வகையிலும், உறுதிசெய்யப் பெறும்.

10. இனி, இவ் வறிக்கையில், கழகத்தின் கட்டமைப்பைப் பொதுமக்களின், அல்லது இக் கழகம் அமைவதில் பெரிதும் ஆர்வங் கொண்ட, கொள்ளுகின்ற அன்பர்களின் பொது மதிப்பீட்டுக்கு உகந்த வகையில், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் பொது அமைப்பு முறைகள் பற்றிய சில கூறுகள் **மாதிரியாக** விளக்கப் பெறுகின்றன. அன்பர்கள் அவற்றினின்று இதன் அமைப்பு முறை-களை உணர்ந்து, இக்கழகம் அமைத்துக் கொள்ள விருக்கும் கட்டுக் கோப்பையும், செயற்பரப்பையும், ஆளுமை எல்லைகளையும் தெளிந்து, இதன் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் இயக்கத்திலும் தங்களை ஈடு படுத்திக் கொள்வார்களாக.

## உ. த. மு. க. அமைப்பு முறைகள்

(மாற்றத்திற்கும் திருத்தத்திற்கும் உரிய மாதிரி வரைவு)

1. கழக **மேலாண்மை :** கழகத்தின் முதல்வர், இயக்குநர் (அல்) நெறியாளர் (அல்) கழக முதல்வர் (அல்) கழகப் பேராளர் (அல்) கழகக் காவலர் என்று அழைக்கப் பெறுவார்.

(தொடர்ச்சி 33-ஆம் பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7514

முன்னிதழ்த் தொடர்ச்சி

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் வரவேற்பும் வாழ்த்துகளும்.

### உலகத் தமிழர் ஒன்று படட்டும்!

... தாங்கள் தொடங்கவிருக்கும் உ. த. மு. கழகம் பற்றிய அறிக்கைகள் கிடைத்து மிக மகிழ்வெய்தினேன். பல்வேறு நாடுகளில் சிதறிக் கிடக்கும் மணிகளைக் கோத்து முத்துமாலை ஆக்கத் தங்கள் ஒருவரால்தான் முடியும் என்று கருதுகின்றேன். மொழிப் பற்றும் இனப்பற்றும் கிஞ்சிற்றும் இல்லாமல், ஆளவந்தார்க்கு அடிமைகளாய் அல்லலுறும் நந்தமிழரை எண்ணிச் செய்யும் செயல் உண்மையிலேயே துணிவு சான்றது என்றுதான் கூற வேண்டும். நந்தமிழகத்தில் எத்தனையோ அரும்பெருந் தலைவர்கள் தோன்றி மறைந்தது உண்மைதான் எனினும், அவர்களிடம் இல்லாத செயல் திறன், தன்னலமற்ற போக்கு, துணிந்த எண்ணம் ஆகிய யாவும் தங்களிடம் நிரம்ப இருக்கின்றமையால், தாங்கள் தொடங்கும் எப் பணியும் வலிந்த ஆற்றலுடன் விளங்கும் என்பதை இவ்வுலகு அறிந்தே இருக்கின்றது. எண்ணித் துணிக கருமம். நாம் தொடங்கி விட்டோம்; தமிழின முன்னேற்றக் கழகம். இதன் மூலம் உலகத் தமிழர் ஒன்று படட்டும்! ... — அ. தங்கராசன், பறம்புக்குடி.

### அரசியல் இயக்கமாக வளர்த்தால் ...

... உ. த. மு. க. தொடங்க விருப்பது மிகவும் மகிழ்ச்சியான செய்தியே! இந்த இயக்கத்தையேனும் இன்றைய நிலையில் அரசியல் சார்ந்த இயக்கமாக வளர்த்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகின்றேன். இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கும், இது மக்களுக்கு ஆற்றவிருக்கும் தொண்டிற்கும் என்னால் இயன்ற உதவிகளைச் செய்யக் காத்திருக்கின்றேன்! வாழ்க உ. த. மு. க! வளர்க உ. த. மு. க! — கு. முருகேசன். அறி. மு. திருத்துறைப்பூண்டி.

### கைகளை வலுப்படுத்துவேன்!

... மாநாடு வெற்றிபெற வாழ்த்துகிறேன். உ. த. மு. க. தழைத்தோங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன். மாநாடு சிறக்க — பெருஞ்சித்திரனார் அவர்களின் கைகளை வலுப் படுத்த பொருள் திரட்டி அனுப்ப அதற்கான பற்று முறிகளை அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றேன். தங்கள்பால் பெருமதிப் புள்ள, — த. முல்லைவழுதி, தூத்துக்குடி-2.

### மற்றவை போல் வீணாகிப் போய் விடக் கூடாது!

... உ. த. மு. க. பற்றிய, திருச்சி ஊரக அன்பர்கள் கருத்துகள் —கலந்துரையாடல், 12-9-81 அன்று நடந்தது. ஏறத்தாழ 25 பேர் கலந்து கொண்டனர். பொதுவுடைமை அன்பர்களும், தி.க. அன்பர்

www.thamizham.net - Free E book No 7514

களும் கலந்து கொண்டனர். பொதுவாக நம் கருத்துரைகளில் அனைவரும் ஈடுபாடாகவே உள்ளனர். ஆயினும் மற்ற கழகங்கள் போன்று வீணாகிப் போய் விடக் கூடாதே என்று வருத்தம் இருந்தது. உ.த.மு.க. வின் செயல் திட்டங்கள் எல்லாம் மாநாட்டிற்குப் பின்னர் தான் வரையறுக்கப் பெறும் என்று கூறினேனும், கடந்த 19 ஆண்டுகளாகவே தென்மொழியின் தொண்டும், அதன் விளைவே உ. த. மு. க. தோற்றம் என்றும், ... உரைத்தேன். காலையில் 10 மணிக்குத் தொடங்கி மாலை 3 மணிக்கு நிகழ்ச்சி முடிவுற்றது. அனைவரும் நன்கொடை கொடுத்து உதவியதுடன் மாநாட்டில் கலந்து கொள்வதாகவும் உறுதியளித்தார்கள். — **குழந்தை ஈகவரசன்**, திருச்சி-14.

**என்றோ அமைய வேண்டியது !**

— தமிழினக் காவல, இப்பெயர் சொல்லி அழைப்பது சாலச் சிறந்ததாகும். தமிழினக் காவலர் என்ற பெயர் தாங்கியிருக்கும் தலைவர்கள் எல்லாரும் தங்கள் நலமொன்றையே எண்ணிச் செயல்படும் போது, தாங்கள் ஒருவர்தாம் தமிழினத்தின் நலத்தை நாடுகின்றீர்கள். என்றோ அமைய வேண்டிய இக் கழகம் இன்று அமைந்ததில் எனக்கேற்பட்ட உவகை உள்ளக் களிப்பிற்கு அடைக்கும் தாழ் உண்டோ. இன்னும் சின்னாட்களில் தங்களை நேரில் கண்டு உரையாடும் நற்பேறு பெறப் போகின்றேன் ... என் குடும்பத்தினருடன் வர எண்ணியுள்ளேன். மேலும் இங்குப் பணியாற்றும் ஓர் ஊழியரும் வர விருப்பம் தெரிவித்துள்ளார் ... எனக்கு மட்டும் பொருள் ஏந்து இருப்பின் என்றோ தங்களிடம் மாணுக்கனாக வந்து இருப்பேன் ... — **மெய். அருண்மொழியன்**, தங்கச்சி மடம்.

**மாநாட்டின் வெற்றிக்கு ஆயத்தப் பட்டு விட்டேன் !**

... விரைந்து செயலாற்றி மாநாட்டின் வெற்றிக்கு எளியேனின் சிறுபங்கினையும் இன்னே கொடுக்க ஆயத்தப்பட்டு விட்டேன் என்பதைத் தெரிவித்து நிற்கின்றேன் ...

—**இரா. கழராம்பன்**, திண்டுக்கல்-7.

**நீங்கா நிழலாக விருப்பேன் !**

... இன்றைய சூழ்நிலையில் நம் இன, மொழி, நாடு விடுதலைக்கான பணியை நாம் செய்தே ஆகல் வேண்டும் — என்பதை முழு மனத்தோடு ஏற்றுக் கொள்கின்றேன். தங்கள் தொண்டிற்கு உறுதுணையாகவும் என்றும் நீங்கா நிழலாகவும் இருப்பேன். தங்களின் அன்புக் கட்டளைக்குக் காத்திருக்கும் ...

— **மு. தமிழநெஞ்சன்**, இடங்கண்ணி.

**துணை தொடருவேன் !**

... அடியேன் காரைக்குடி அழகப்பா கல்லூரி தமிழியக்கப் பாசறை மறவன் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகின்றேன். ... மாநாட்டுத் தொடக்கம் பற்றிய துண்டறிக்கை கண்டேன். மிக்க

www.thamizham.net - Free E book No 7514

மகிழ்ச்சி. அடியேன் குறுகிய கால விடுப்பில் தமிழகம் திரும்புகையில் சென்னையில் தங்களைக் கண்டு செல்வேன். நிலையான ஓர் அமைப்பை எம் ஊரிலேயே தொடங்குவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ள விழைகின்றேன். கடந்த பத்தாண்டுகளாகத் தங்களியக்கத்திற்குப் பல்லாற்றானும் துணை வந்திருக்கின்றேன். இனியும் தொடருவேன் என்பதில் ஐயமில்லை ....

— **பேரா. தமிழன்பன்** க. மு. அரசு கல்லூரி, பீரு (ம. பி.)

## இயன்ற உதவியைச் செய்வேன் !

... உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாடு சென்னையில் நடைபெறுவதை அறிந்து உவகை உள்ளம் அடைந்தது .. பாவலரேறு பெருஞ்சித்திரனார் அன்புக் கட்டளைக்காகவும் உ. த. மு க. தொடக்க மாநாட்டிற்காகவும் என்னால் இயன்ற உதவியைச் செய்ய முயற்சி எடுத்துக் கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் ...

புலவர். **மு. சு. தங்கவேலன்**, க. மு. வாணியம்பாடி.

... மாநாடு தொடங்க - செம்மையாக நடைபெற்று நல்ல பல செயல்களைச் செய்ய என்னால் இயன்ற உதவிகள் அனைத்தும் செய்வேன். — **மு. சுடர்வேந்தன்**, கோவை-19.

## ஒல்லாங்கு ஒத்துழைப்புத் தருவர் !

.. மொழி, இனம், நாடு காக்க விழி மூடாது பாடாற்றும் தாங்கள், இப் பாரக மெங்கணும் பரவி உறையும் பைந்தமிழர் எல்லாரையும் ஒன்று படுத்தவும், உயர்தனிச் செம்மொழியை உலகமெலாம் பரப்பவும்,தமிழினம் நன்கு சிறக்கவும்,உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் என்றொரு சீரிய அமைப்பைத் தொடங்குதல் செயற்கருஞ் செயலாகும். இனப்பற்று இறையளவு மின்றிப் பணப்பற்றே குறியாய்க் கொண்டு, தன்னலப் பிண்டங்களாய் — தான் தோன்றிகளாய்த் திரியும் நம்மின நன்மக்களுட் பலர், இக் கழகத்தின் நோக்கும் போக்கும் அறிந்து, இன்றியமையாமை உணர்ந்து, இன்னே தம்மை இணைத்துக் கொள்ளல் அறிவுடைமையாம், தங்களது தன்னலமிலாத் தனிப்பெரும் முயற்சிக்குத் தமிழர் பலரும் துணையாகத் துணிந்து வருவர் ; ஒல்லாங்கு ஒத்துழைப்புத் தருவர் ! உ. த. மு. க. உலகெலாம் பரவிப் பொலிக ; உயர் தமிழே எங்கும் நிறைக ; உதிரிகள் மறைக. — **பெரு. தமிழ்வேந்தன்**, பவானிசாகர்.

## இனி தொய்வு இல்லை !

... உ. த. மு. க. தொடக்கம் பற்றி மகிழ்கிறேன். நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் .... உ த.மு.கவின் ஏழு கொள்கைகளுடன் அதன் திட்டங்கள் நெறிமுறையுடன் விடா முயற்சியோடு செயல்பட வேண்டுவதுடன், பிறநாட்டுத் தமிழர் தலைவர்

www.thamizham.net - Free E book No 7514

களும் அதில் ஈடுபாடுறும் ஈர்ப்புத் தன்மையைக் கழகம் உருவாக்கிச் செயற்படுத்தும் என்றே எண்ணுகிறேன் ; வேண்டுகின்றேன்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமாகிய எங்கள் நிறுவனமும் உங்களுடன் மாறுபடாத வகையில் ஒத்துழைக்கும். உறவுத் தொடர்புகளைக் கொள்ளும். கோளங்கள் தனித்தனியே இயங்கட்டும். தமிழ், தமிழர், தமிழிலக்கியம் என்ற அடிப்படையில் தூய்மையுடன் —வாய்மை நலமுடன் — கூட்டுறவோடு செயல் படுவோம். தமிழர் விடுதலையைத் தலைக்குறிக்கோளாகக் கொள்வோம்.

முரண்பாடுற்ற விடாப்பிடி (பிடிவாதம்), தற்கொலை மனப்பாங்கு, குழுகாய உணர்வற்ற தற்குறித்தன்மை ஆகிய கரணியங்கள் பல தமிழினத்தவரின் வெறியுணர்வுகள் உ. த. மு. க. வை உட்பகை யாக்கி விடாமல், தாங்களே எழுஞாயிற்றின் வலுவாளராக இருந்து, செயலாற்றி, அதனைக் காப்பாற்ற வேண்டும் என்றும், தென்மொழி இதழைக் கிழமை இதழாகக் கொணரும் திட்டம் வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன். இவ் வியக்கம் உலகத் தமிழர் விடுதலைக் கழகமாகவும், மற்றொரு T. L. O. என்னும் 'மாமேரு' வாகவும் வளர வேண்டும். எதிர் வரும் பொங்கலில் தமிழீழத் தமிழரசு தோற்று விக்க நாம் அணியமாவோம். இதனை உள்முகமாக வைத்து உ.த.மு.க. வை இயக்குங்கள் — உங்கள் கருத்துகள் பரவ வேண்டும்! தென் மொழி இயக்கத்திற்கு இனி தொய்வு இல்லை. வலிவும் பாலமும் அக்கன்று வருகின்றன ! — இர. வீரப்பன், தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கம், கிளாங், மலேசியா.

### ஒத்துழைப்பு !

... தாங்கள் தொடங்க விருக்கும் கழகத்திற்கு என்னால் இயன்ற ஒத்துழைப்புக் கொடுக்கிறேன் —

— அ. இராசகுமார், சோலையார் பேட்டை.

... உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாடு நடப்பதறிந்து பூரிப்படைவர்களில் நானும் ஒருவனே. தமிழினத் திற்கு விழிப்பும் எழுச்சியும் ஊட்டுவதற்காக அமைத்த முதல் கூட்டத்திற்கு எனது முழுமூச்சையும் ஒத்துழைப்பையும் தர மிகுந்த கடமைப் பட்டவன் என்பதை ஐயா அவர்களுக்கு உறுதியளிக்கிறேன்.

— தெ. செ. கந்தசாமி, தொட்டியப்பட்டி.

### பணிகள் சிறப்பாக நடைபெறவேண்டும் !

... உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டில் கலந்து கொள்ள இசைகிறேன். தங்கள் பணிகள் சிறப்பாக நிறை வேற வேண்டும் என விரும்புகின்றேன்.

— பர். பொற்கோ, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-5.

### மெல்ல மெல்ல வளர வேண்டும் !

... நல்ல முயற்சி. கலைஞர் கருணாநிதி கூட, பம்பாய் தமிழ்ப்

www.thamizham.net - Free E book No 7514

பேரவை ஆண்டு நிறைவு விழாக் கூட்டத்தில் உலகத் தமிழர்களை யெல்லாம் இணைக்க, பாதுகாக்க ஒரு பேரியக்கம் வேண்டுமென்று கூறியுள்ளார். உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் ஏற்கனவே பல நாடுகளில் இயங்கி வருகிறது. ஆனால், எல்லாம் இணைந்து மாபெரும் இயக்கமாக மாறித் தமிழினத்தின் அரசியல், நாட்டு, மொழி உரிமைகளுக்காகப் போராடினால் சரி. மெல்ல மெல்ல வளர வேண்டும். பல தடைகள் வெளிப் படையாகவே உண்டு — சாதிப் பிரிவுகள், சமயப் பற்று, அரசியல் கொள்கை வேறுபாடு என. ஆகையால் தான் மெல்ல மெல்ல எனக் குறிப்பிட்டேன் ...

— ப. புத்மநாபன், வழக்கறிஞர், சோமனூர்.

முயற்சி வெல்க !

... உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டில் கலந்து கொள்கிறேன் ... தங்கள் முயற்சி வெல்வதாகுக !

—பர். சி. பாலசுப்பிரமணியன், க. மு. தலைவர் தமிழ் மொழித்துறை. சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-5.

இயன்ற ஒத்துழைப்பை வழங்குவேன் !

... மாநாடு சிறப்புற அமைய என்னால் இயன்ற ஒத்துழைப்பை உறுதியாக வழங்குவேன் ... — பொற்செழியன், வெங்காளூர்-1.

வெற்றிடைய வாழ்த்துகள் !

... உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க விழா வெற்றி அடைய எம் வாழ்த்துகள். அனைத்துச் செய்திகளையும் நிழற் படங்களையும் அனுப்புங்கள். உலகத் தமிழர்கள் அறிய,தகுந்த படி வெளியிடுவோம் ... நாம் செய்ய முடிந்த உதவிகளை இங்கிருந்து செய்வோம். உ. த. மு. க. உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது அன்பைத் தெரிவியுங்கள் !

— ச. ம. சதானந்தன், அறி. இ. ஆசிரியர் 'இலண்டன் முரசு'

எண்ணியது உருப்பெறுகிறது !

...கடந்த நான்கு ஐந்தாண்டுகளாக நான் எண்ணி வந்தவையே செயல் உருப்பெறுவது குறித்து மிக்க மகிழ்வடைகின்றேன். என்னால் இயன்ற உதவிகளைச் செய்ய உறுதியாக விருக்கின்றேன்.

— கோ. ப. சீரங்கசாமி, பொறியாளர், காங்கேயம்.

நெஞ்சார்ந்த வாழ்த்துகள் !

— தங்களது புதிய இயக்கத்திற்கு எங்களது நெஞ்சார்ந்த வாழ்த்துகள் ! ... — ஈ. ப. சுப்பையன், கோட்டயம்.

என்றென்றும் காத்திருக்கின்றேன் !

... பேருவகை எய்தினேன். தமிழும் தமிழரும் தழைத்தோங்க என்னால்இயலுவனவற்றைச்செய்ய என்றென்றும்காத்திருக்கிறேன் ...

— கார்த்திதாசன், கோட்டையம்.

www.thamizham.net - Free E book No 7514

**வேறுயாதுளது ? யாருளர் ?**

... இன்றைய அரசியல் ஆரவாரப் போக்கினிடையே புதிய இயக்கம் மொழி, இன, நாட்டு நலனைக் கட்டிக் காப்பது இன்றியமையாததே. அதற்குத் தன்னலம் கருதத் தொண்டர் பாசறையாம் தென்மொழியணியன்றி வேறு யாதுளது ? யாருளர் ? .. ஆனால், இத்தகு இயக்க முயற்சிகள் எல்லாம் தமிழக விடுதலையின் தேவையை எள்ளளவும் குறைத்திடுவனவாக நான் கருதவில்லை. புதிய இயக்கம் தமிழக விடுதலைப் போர்க்களத்திற்குத் தேவையான வீர மறவர்களின் பயிற்றகமாக அமையட்டும். தமிழின் அடிமைப் பூட்டறுக்கப் புறப்படுகின்ற மறவர் பட்டியலில் என் பெயரையும் இணைத்திடுக. தமிழ் மொழிக்கும், இனத்திற்கும் பகைவர் பறிக்கும் படுகுழியில் வீழாது காத்திட எந்நாளும் அணியமாக இருப்பேன் ....

— **வாய்மை இளஞ்சேரன்**, பாலையூர், தஞ்சை மாவட்டம்.

**வீறு கொள்ளட்டும் தமிழினம் !**

... இந்த நேரத்தில் உ. த. மு. க. தொடக்க மாநாடு சிறப்புற அமையவும் வெற்றி பெறவும் வாழ்த்துகிறேன். நண்பர்களுடன் மாநாட்டில் கலந்து கொள்ளவும் ஆவன செய்து வருகிறேன். வெல்க தங்களின் தளரா முயற்சி ! வீறு கொள்ளட்டும் தமிழினம் !!

— **வீ. சீத்தாராமன்**, உ. செல்லூர், உளுந்தூர்ப் பேட்டை.

**என்னையே பிறப்புக்கடனாக ... !**

கடந்த 15 ஆண்டுக்காலமாகக் கண்டு வந்த கனவு கனவாகவே முடிந்து விடுமோ என்ற ஐயப்பாட்டிலிருந்த நான், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் தொடங்க விருப்பது குறித்தும், அதனுயர்ந்த குறிக்கோள் குறித்தும், எப்படியெல்லாமோ உவகை அடைந்தேன் என்பதை எழுத்தால் எழுத முடியவில்லை. காலமெல்லாம் உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு என்ற கொள்கையில் வாழ்ந்து வரும் நான், இந்தியக் கடற்படையிலிருந்து வடவாரியர்களால் வெளியேற்றப்பட்டேன். மொழி, இன விடுதலை ஒன்றே குறிக்கோளாக விருந்து, தங்களின் மேலான பணிக்கு என்னையே பிறப்புக் கடனாகச் செலுத்துகிறேன். வாழ்க தென்மொழி ! வளர்க நமது குறிக்கோள் !! என்றும் உங்கள்,

— மரு. **தமிழ் நம்பி**, முன்னாள் மீகாமன், புதுத்தாமரைப்பட்டி.

**பெரு மகிழ்ச்சி !**

... உலகத் தமிழின முன்னேற்றக் கழக மாநாடு தொடக்கம் கண்டு பெரு மகிழ் வடைகின்றேன் ..

— **இரா. நடராசன்**, க. மு. இருப்பூண்டி, நாகை.

**இப்பொழுதுள்ள நிலையை உ. த. மு. க. மாற்றும் !**

.. உலக நாடுகளில் ஆங்காங்கே குடியிருக்கும் தமிழர்க்கு உ. த. மு. க. தொடங்க இருக்கும் நிகழ்ச்சி மிக விருப்பானது ;

www.thamizham.net - Free E book No 7514

இனிப்பானது. குறிப்பாக, மொழி, இன நோக்கை மட்டுமே தன் கொள்கையாகக் கொண்டு, பல்லாண்டுகளாகத் தொண்டாற்றி வரும் பாவலர் பெருஞ்சித்திரனார் பார்வையில் உ.ல.க இயக்கம் உருவாவது மிகச் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது.

இன்று வரை தமிழின் பெயரால் அல்லது தமிழர் பெயரால் தமிழகத்தில் இயங்கும் இயக்கங்களாலும் தமிழக அரசினாலும் வெளிநாடு வாழ் தமிழர் அணுவளவு நலமும் பெற்றதில்லை. இந்தியத் தமிழர், உள்நாட்டில் அரசியலிலும், பொருளியலிலும் ஒரு மதிக்கத் தகும் இனமாக இருந்தால் — இருந்திருந்தால் — வெளிநாடு வாழ் தமிழர்கட்குக் குறைந்த அளவு மதிப்பாவது இருக்கும் — இருந்திருக்கும். பஞ்சாபியருடன் ஒப்பிடும் போது, தமிழர், மிக இழிந்த நிலையிலேயே அன்றும் இன்றும் இருந்து வருகின்றனர் என்பது, வெளிநாட்டினின்று பார்க்கும்போது,மிகத் துலக்கமாகத் தெரிகிறது. உ. த. மு. க. இந் நிலைமையை மாற்றுமாக!

— பேரா. க. ப. அறவாணன், பேரா. தாயம்மாள் அறவாணன்
தக்கார் பல்கலைக் கழகம், செனகல், மே. ஆப்பிரிக்கா.

**எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு!**

... தங்களின் அரிய முயற்சியால், தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் செல்லும் என்பதில் எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. வாழ்க உ. த. மு. க!

— **நா. அன்புச் செல்வன்**, க. மு; இல. இ. திருப்பராய்த்துறை.

---

## உலகத் தமிழினத்தை இணைக்கும் ஒரே இயக்கம்;

## உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்!

### உறுப்பினராக்கிக் கொள்ளுங்கள் உங்களை!

### உழையுங்கள் என்று சொல்லுங்கள் எங்களை!

உண்மை உணர்வோடும், குடும்பப் பிணைப் போடும் உருவாகின்ற ஓர் உழைப்பியக்கத்தின், தொடக்க மாநாட்டிற்கு வர இன்றே அணியமாகுங்கள்!

நினைவிருக்கட்டும்! நெஞ்சில் நிறுத்துங்கள்!

### உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாடு!

சென்னைப் பெரியார் திடலில். துலை உஉ, உரு (நவம்பர் 7, 8)-இல் நடைபெறவிருக்கிறது! நடையிடுங்கள் குடும்பத்துடனும் நண்பர்களுடனும். வாரீர்! வாரீர்!

www.thamizham.net - Free E book No 7514

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாடு.

## நன்கொடை தண்டுவது பற்றி அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு.

உ. த. மு. க. தொடக்க மாநாட்டுத் தொடர்பாக, நன்கொடை திரட்டுவதற்கான 20 தாள்கள் கொண்ட பற்றுமுறிச் சுவடிகளும் அறிக்கைகளும் ஆங்காங்குள்ள தென்மொழி அன்பர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் கடந்த மாத இறுதிலேயே அனுப்பப்பட்டுள்ளன. அன்பர்கள் நன்கொடைகளைத் திரட்டத் தொடங்கியிருப்பார்கள் எனக் கருதுகின்றோம். அறிக்கைகள் போதவில்லையானால் தேவையானவர்கள் தங்கள் முயற்சியிலேயே அடித்துக் கொள்ளலாம். இல்லெனில் தென்மொழிக்கு எழுதலாம். விடுக்கப்பட்ட பற்றுமுறிச் சுவடி தீர்ந்து விட்ட நிலையில் மேலும் நன்கொடை திரட்ட விரும்பினால், உடனடியாக அலுவலகத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். அக்கால், அவர்கள் ஏற்கனவே திரட்டியுள்ள தொகையினையும் தீர்ந்துபோன பற்றுமுறியின் அடிக்கட்டையினையும் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து விடுதல் வேண்டும். எப்படியும் திரட்டப் பெறும் நன்கொடைகளை செப்டம்பர் இறுதிக்குள் அனுப்பி வைப்பது நல்லது. பணி எஞ்சுமானால் அக்டோபர் 15-க்குள் கட்டாயம் அனுப்பி விடக் கேட்டுக் கொள்கிறோம்.

புதிதாக நன்கொடை திரட்டும் விருப்பமுள்ள அன்பர்கள் அலுவலகத்திற்கு எழுதிப் பற்றுமுறிச் சுவடிகளைப் பெற்றுக் கொள்ளலாம். வெளியிடப் பெற்று, அமைப்பாளர் கையொப்பமும் அலுவலக முத்திரையும் வைக்கப் பெற்ற பற்றுமுறிச் சுவடிகளிலேயே நன்கொடைகள் தண்டப்பெறுதல் வேண்டும். வேறு முறைகளில் தண்டப் பெறும் நன்கொடைகளுக்கு அலுவலகம் பொறுப் பேற்றுக் கொள்ளாது என்பதை அன்பர்கள் உணர்தல் வேண்டும். திரட்டப் பெறும் நன்கொடைகளைப் பெருஞ்சித்திரனார், ஆசிரியர், தென்மொழி என்னும் முகவரிக்குப் பணவிடை வழியாகவோ, இந்தியன் வைப்பக வரைவோலை (Indian Bank Draft) வழியாகவோ விடுத்து வைக்க வேண்டும். இந்தியன் வைப்பகம் இல்லாத ஊர்களில் வேறு வைப்பகங்களிலும் வரைவோலை (Draft) பெற்று அனுப்பலாம்.

மாநாடு நடத்தவும், கழகம் அமைக்கவும், கழகத்திற்கென்று செய்தியிதழ் தொடங்கவும் வேறு தொடர்ந்த பணிகளுக்கும் மிகுந்த அளவில் தொகை திரட்டப் பெற வேண்டியிருப்பதால், அன்பர்கள் இவ்வகையில் நிறைந்த ஆர்வமும் அக்கறையும் காட்டித் தண்டல் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். நன்கொடைகளை அன்பு முறையாலன்றிக் கட்டாய முறையில் தண்ட வேண்டா என்றும் வேண்டிக் கொள்கின்றோம்.

பெருஞ்சித்திரனார். (அமைப்பாளர்.)

www.thamizham.net - Free E book No 7514

ஒரு கருத்துரை மடல்

# உ. த. மு. க. இயக்கமும் அமைப்பும்!

அன்பு ஐயா அவர்களுக்கு, வணக்கம்!

தென்மொழிச் சுவடி-18, ஓலை-1 இன் ஆசிரியவுரை படித்து உணர்ந்தேன். அஃதாசிரியவுரையன்று; பட்டயம். ஆனால், அதில் மமதை, தேசியம் என்ற இரு சொற்கள் ஆளப்பட்டுள்ளன. இவை தனித்தமிழ்ச் சொற்களா? மமதையைத் தற்செருக்கென எழுதியிருக்கலாமே. தேசியத்தை நாட்டினம் என்று எழுதியிருந் திருந்தால் நன்றாக இருந்திருக்குமே. மொழி ஞாயிறு பாவாணர் அவர்களின் மறைவுக்குப்பின் தென்மொழி வழிமாறுகின்றதா என ஐயுற வேண்டியுள்ளது. இச் சறுக்கலுக்கு அரசியல் அடியெடுப்புத் தான் காரணியமா? தென்மொழியிற் காட்டுக்குத் தவிர பிற சொற்களை எதிர்பார்க்க விரும்பவில்லை. **தென்மொழியும், அதை உள்நின்று இயக்கும் தூங்களும் எங்களின் சொத்து. எங்களுடைமையில் சிறு மாசும் கலக்க மனமில்லை,** மற்றபடி எவ்வகையுணர்வும் இல்லை.

(**ஆசிரியர் விளக்கம்: மமதை, தேசியம்** இரண்டும் தூய தமிழ்ச் சொற்களே. **மதர்ப்பு—இறுமாப்பு, மிகுதி, வெறி என்னும்** பொருள்படும் சொல். **மதர்ப்பு—மதப்பு—மதம்—மதை** (குறுந் 286, கலி 131, அகம் 86, 130, சிலப். 8-76) மாமதம்—மாமதை—மமதை. அடுத்து, திசை என்னும் வேரடியாகப் பிறந்த சொல் **தேசம், தேயம்,** என்னும் சொற்கள். தேசியம் தூய தமிழ்ச் சொல்லே.

இனி, தென்மொழி அன்பர்கள் ஒன்றைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஐயுறவான எந்தச் சொல்லையும் தென்மொழி பயன்படுத்தாது. இதுவரை பயன்படுத்தியதும் இல்லை. மறைமலையடிகளார் வட சொற்கள் என்று கருதிய பல சொற்களைப் பாவாணர் தென்சொற்கள் என்று காட்டியுள்ளார். இனி, பாவாணர்க்கே பல சொற்களில் இறுதிவரை ஐயுறவு இருந்ததும் கவனிக்கத் தக்கது. இதையடுத்து இன்னோர் உண்மையையும் அன்பர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். பாவாணர் மொழியாய்வுக் கருத்துகளை வெளிப்படுத்து வதிலும் அவர் வாழ்வு நலத்துக்குத் துணை நிற்பதிலும் தென்மொழி பயன்பட்டதே தவிர, **தென்மொழியைப் பாவாணரோ, பிறரோ என்றுமே இயக்கியதில்லை.** தொடக்கத்திலிருந்து இன்று வரையிலும் **தென்மொழி தனக்கென்று ஒரு தனிவழியை வகுத்துக் கொண்டு-தான் இயங்கி வந்தது,** வருகின்றது. எனவே, அவர் மறைவுக்குப் பின்னோ முன்னோ தென்மொழி வழி மாறுகின்றது என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை, அவரையும் தென்மொழியையும் மயங்க உணர்ந்தவர்கள் தெளிந்து கொள்வார்களாக. **—பொறுப்பாசிரியர்**)

கழகக் கொள்கைகளை ஆங்கிலப் பெயர்ப்புச் செய்திருப்பதிலும் இரு சிறு தவறுகள் இருப்பதாகக் கருதுகிறேன். "முன்னேற்ற" என்பதை '**Munnetra**' என்று எழுத்துப் பெயர்ப்புச் செய்யப்பட்டு

www.thamizham.net - Free E book No 7514

உள்ளது. 'Munnetra' என்பதைத் தமிழ் எழுத்துப் பெயர்ப்பில் 'முன்னேற்ற' என்றுதான் எழுதவும், பலுக்கவும் முடியும். இதை 'Munnetta' என்று எழுத்துப் பெயர்ப்புச் செய்திருக்கலாம். கழகத்தின் நான்காம் கொள்கையாகிய 'பொதுவுடைமைப் பொருளியல்' என்பதும் 'Socialistic Economy' என்று மொழி பெயர்க்கப்பட்டு உள்ளது. இது நேரானதாகப் பட வில்லை.

'அரசியலில் ஏற்கனவேயுள்ள இயக்கங்களில் தகுதியுள்ளவற்றிற்குத் தன்னழிவு நேராதவாறு அவ்வப் பொழுது இது கட்டிக் காக்கும்' என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இவ்வாறு அரவணைத்துச் செல்ல நேரும் பொழுது அந்த வெள்ளத்தில் சிலர் அடித்துச் செல்லப் பட்டு விடுவர். தென்மொழி இதழ் நிலையிலிருந்து என்ன செய்ததோ அதையேதான் செய்ய வேண்டும். மேடை யேறிப் பேசினால், கூழாங்கல்லைக் கூட வயிரக் கல்லென்று சொல்லி வைக்க வேண்டிய இக்கட்டு வரும். ஒரு பேச்சுக்காகவாவது பொய்யெனத் தெரிந்தும் பேசி வைக்க வேண்டி வரும். உங்களை அந்த அரசியற்காரர்கள் வரிசையிற் காணவும் கூட மனம் ஒருப்படவில்லை.

இனி, தேவைப்படும் பொழுது அரசியல் ஈடுபாட்டைத் துறந்து விடாது என்றும் குறித்துள்ளீர்கள். அருள் கனிந்து, ஓடும் தொடர் வண்டிக்குள் ஒரு தள்ளுவண்டியை ஓட்ட முனையாதீர்கள். சிறிய மாட்டுவண்டியானாலும் தனிச் சாலையில் ஓட்டுவோம். என்னதான் அறிவும், திறமையும் இருந்தாலும், ஐந்து கோடித் தமிழக மக்களும் தங்கள் பின்னின்றாலும் சென்னைச் சட்ட மன்றம் ஏறி ஒரு பயனும் இல்லை. அம் மன்ற அமைச்சர்களும், உறுப்பினர்களும் தில்லிக் காரனின் கூத்திலாட்டி வைக்கப் பெறும் பாவைகளே! எந்த முக உருவை வைத்துக் கொண்டாலும், எவ் வண்ணம் பூசப் பெற்றாலும் மூலக் கதை ஒன்றுதான்; ஆட்டுவிப்போனும் ஒருவனே. தில்லி ஒப்பினாலும் இங்குள்ள பார்ப்பனர் விடார்; உயர் தீர்ப்பு மன்றத்துக்குச் சடக்கெனச் சென்று தடுத்து நிறுத்தி மகிழ்வர். எனவே, அரசியலீடுபாடு என்பது தமிழ் நாட்டினத்துக்குப் பொருந்துவதான முழுப் பொதுவுடைமை ஆட்சியரசியலீடுபாடாகவே இருத்தல் வேண்டும். மேலும், ஒருவர் ஒரு முறை உறுப்பினராகவோ, அமைச்சராகவோ இருந்து விட்டால் மாறும் சூழ்நிலைகளிற் சும்மாவிருக்க முடியாது. துய்த்த ஏந்துகள் நினைவிலோட இவர் கட்சி விட்டோடுவார். கட்சி மாறியாவது அந்த நலன்களைத் துய்த்துக் கொண்டிருக்க முயல்வார். அதற்காக உலகையே ஒரு புரட்டுப் புரட்டிப் போட்டுப், புளுகை அவிழ்த்துப், பொல்லாங்கு பேசிப், புழுதி வாரித் தூற்றிப், போன இடம் மெச்ச நடப்பார். இந் நிலைமைகளைக் கண்கூடாகக் காண்கின்றோமே நாம் இன்று! எனவே, சரியானதை எண்ணிச் செய்யுங்கள். சென்னைச் சட்ட மன்றப் புகவினால் நம் வலுவான கொள்கை கூர் மழுங்கித் தேயும். நம் எண்ணம் மாறுபடும். கவனம் வேறு சிக்கல்களில் மாட்டிக்

www.thamizham.net - Free E book No 7514

கொள்ளும். மக்களை ஏமாற்றப் போலியான காரணியங்களைக் கூற வேண்டி வரும். இன்றைய ஆட்சியியல் சாய்கடை மட்டுமன்று; அஃதொரு புதை சேற்றுக் குளம்; மீள முடியாது. கொள்கை உண்டு மனத்திலே என்று குறிப்பிட்டுக் கொண்டு, சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் இரட்டைப் புனைவு போட வேண்டி வரும். இனி, ஐயா, தங்களின் நினைவுக்கும் அன்பர்களின் பார்வைக்கும் எனச் சிலவற்றைக் கூற விரும்புகின்றேன். இயக்கக் கொள்கைகளில் முதலாவதான "தூய்மையான தமிழ்முன்னேற்றம்" என்பது வெற்றி பெறத் தமிழ் மொழி பிற மொழிப்பிடிப்புகளி னின்று முழுவிடுதலை பெற்றுத் தனித்தமிழாய் விளங்கவேண்டும். வாழ்க்கையின் அனைத்துத் துறைகளுக்கும் அனைவரும் அறியும் வண்ணம் சொற்களைப் பயன்படுத்திக் காட்ட வேண்டும். இப்பணி முகாமையாகச் சிற்றூர்ப் புறங்களிலே தொடங்கப் பெற வேண்டும். நகரங்களில் விளம்பரமாக வேண்டும். அலுவலகங்களில் அழகு நடைபயில வேண்டும். சட்டமன்ற உரையாட்டில் தவழ வேண்டும். இதால் செய்தித்தாள்களின் வழி மக்களுக்கு நினைவிலிறுத்த வேண்டும். நாடகம், திரைப் படங்களில் பதிவாக, வழக்குப் பெற வேண்டும்.

இத் தமிழினம் விடுதலை பெற வேண்டுமானால், குலப் பிரிவுகளை யும், வகுப்புகளையும் பெயரின்றிச் செய்தல் வேண்டும். தேவை யானால், கொண்டலுக் கொன்றும், கொடுக்கலுக்கொன்றும் என, தமிழினம் இருகிளைகளாகப் பிரிக்கப் படலாம். மணமுறைகளுக்காக ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனிப் பெயர்கள் வைத்துக் கொள்ள லாம். எடுத்த எடுப்பிலேயே கண்டுகொள்ள இருவேறு அடை யாளங்களைக் கைக்குட்டைகள் அல்லது மேல் துண்டின் முகப்பு களில் பூப் பின்னலாகப் போட்டோ அல்லது அச்சிட்டோ கொள்ள லாம். பச்சை குத்துவது தடுக்கப் பெறல் வேண்டும். பெண்கள் மட்டிலும் கொங்காரப் பொட்டோ, வண்ணப் பொட்டுகளோ வைத்துக் கொள்ள இசைவு தரலாம். ஆண்களைப் பொறுத்த மட்டில் எந்த வகை பூச்சடையாளங்களையும் செய்யக் கூடாது.

சுரண்டலற்ற — பிறர் அரத்தத்தை உறுஞ்சி வாழும் அட்டை யரற்ற — ஏய்ப்போரற்ற — இரப்போரற்ற — பூசாரியரற்ற — மதமூடற யற்ற ஒரு குமுகாயம் அமைக்கப் பெறல் வேண்டும். ஆனால், இறைமையறிவுணர்வும், இறைவழிபாடும் நிரவி நிற்க வேண்டும். பொதுவுடைமைப் பொருளியல் சார்ந்த ஒரு குமுகாயத் தில் இறைவழிபாடா என ஏளனம் புரிவோர் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழர் ஏதோ அறியாமையிலோ, மூடத்தன மாகவோ இறையறிவுணர்வுடையவரல்லர். இவ்வினம் மிகமிகப் பழமையானதும், பண்பட்டதுமான ஓரினம். வழி வழி வரும் மெய்ப் பொருளறிவுணர்வு கொண்ட இனம். இவ்வுணர்வைத் தள்ளி விட்டு

www.thamizham.net - Free E book No 7514

இங்கு யாரும் ஏதும் செய்து விட முடியாது. எத்தனைப் பேர் மேடையில் கடவுளில்லை என்று முழங்கி விட்டு வீட்டின் தாழ்ப்பாளிட்ட தனியறையில் இறை வழிபாடு செய்கின்றார்கள் தெரியுமா! மேலும், இறை மறுப்பை முழுவதுமாகக் கடைப் பிடித்த நாடுகளெல்லாம், சில காலங்கழித்து கோயில்களைத் திறந்து விட்டு இறை வழிபாட்டுரிமையையும் தந்துள்ளனவே! எனவே, போலியான — தவறான அடிப்படையிலான ஒரு கொள்கையை முன்வைக்க வேண்டாம் ஆனால், கோயில்களில் பூசாரித்தனம் உடனே ஒழிக்கப்பட வேண்டும். மக்கள் விரும்பும் வகையில் தத்தமக்கு ஏற்ற வகையில் இறை வழிபாட்டைத் தாமே செய்ய வேண்டும். அதே நேரம், இத்தனை நேரம் (முறை) என்றும், வேளை என்றும் வழிபாடு செய்வதையே தொழிலாகக் கொண்டு அலையக் கூடாது. மதமும் இல்லாமற் செய்யப்பட வேண்டும். இங்குள்ளோர் எல்லா வகையிலும் தமிழராய் வாழ வேண்டும்.

அண்ணா இப்படிச் சொன்னார், காமராசர் இப்படி நினைத்தார் என்று மூலைக்குமூலை பிய்த்துக்கொள்வது போன்றே, உருசியாவைப் பார், இலெனினும் காரல் மார்க்சும் இப்படிச் சொன்னார்கள், சீனத்தைப் பார், மா சேதுங்கின் கொள்கை விளக்கங்கள் என்று, மதுரையில் மழை பெய்ய மடுக்கரையில் குடைபிடிப்பவர்களையும், தென்னை மரத்துக்குத் தேள் கொட்டினால் பனை மரத்துக்கு பதவியை கட்டிற்று என்று ஓலமிடுபவர்களையும் போன்றே, சார்புக் கொள்கையே கூடாது. தந்தை பெரியார், பேறிஞர் அண்ணா, மொழி ஞாயிறு பாவாணர், மறைமலையடிகளார் போன்ற நம் மரபு முறைத் தலைவர்களை மனத்தில் நிறுத்தித் தமிழகத்துக்கென தனிப் பொதுவுடைமைக் கொள்கையை மக்கள் முன்வையுங்கள். மக்கள் கொள்கையை விளங்கிக் கொண்டார்கள் என்பது அவர்கள் செல்லும் ஊர் வலங்களாலோ, பகட்டான மேடைகளாலோ, அழகு நடைப் பேச்சாலோ உறுதிப்படாது. அவர்கள் மன வலிமையுடன் உடல் வலிமையும் உடையவர்களாக ஆக்கப் பெறல் வேண்டும். ஏன் என்று ஆய்ந்து பார்க்காத, துணிவு மிக்க, கட்டுப்பாடுள்ள, கட்டளையை உடனே ஏற்று நடக்கும் படைஞரைப் போல் மக்களை, உருவாக்க வேண்டும். என்ன பணி எனக்களித்தாலும், எப்படிக் கட்டளையிட்டாலும் ஏற்பேன். தங்கள் அன்புள்ள,— கி. பாலு, மின்பாறை.

---

## மாநாட்டில் தங்கலும் உணவும்

நடைபெற விருக்கும் உ. த. மு. க. மாநாட்டிற்கு வரவிருப்பவர்கள் முன் கூட்டியே தங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளக் கேட்டுக் கொள்கின்றோம். உணவுக் கடை ஒன்றைச் சிறு அளவில் மாநாட்டரங்கின் அருகில் கொணர ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது. — **மாநாட்டுச் செயற்குழு.**

www.thamizham.net - Free E book No 7514

The Exalted Aims of the

# Ulaga Thamizhina Munnetra Kazhagam

('Oo. Tha. Mu. Ka.')

(A Progressive Movement of the Tamilian Peoples)

0 A progressive improvement of the pure Tamil language

0 An Egalitarian Society unmutated by, and shorn of th divisive forces of caste and religion.

0 A Polity rid of lowly degradations, bickerings and deceit.

0 A Socialistic Economy based on the needs of Tamil nationality.

0 The Mind, Knowledge and Life — the growth of an unabhorrent art-form, which enriches and invigorates these.

0 A Scientific approach in all the spheres, in accordance with the times.

0 A cultural intercourse, consistent with ancient Tamil tradition and humanological eminence.

— The Sterling Principles, Seven in all!
Our Aim's to Strive for them, Anon and On!

## PREAMBLE IN SYNOPSIS:

The 'Oo. Tha. Mu. Ka' is yet another new movement professing the upliftment of the Tamilian peoples in the Linguistic — Socio-political — Scientific — and — Cultural Horizons!

It arises to fulfil the dire need of the time to integrate & sustain and emancipate a diffluent Tamil race, in the grip of an ever-diffusive political melodrama, enacted by ever - digressive charismatic leaderships.

But — It is not a 'yet another'! It is not 'one among the several'!.. It comes to Replace and Resuscitate! To Innervate and Empower! Alike in Word and Deed! To unify all people of ethnic Tamilian origin the world over, and bring them together under an International Tamil Commonwealth, which in turn, will participate as a

www.thamizham.net - Free E book No 7514

member-entity in a future-day Republican World Government of all federated races and nations.

It is The Long Awaited 'Deus Ex Machina'! It propounds, propagates and hands out the Panacea for all the ills ailing the much eulogised Tamilian Humanity of pristine glory (but of present-day dark misery and dismal embitterment!).

It expounds the all encompassing Profound Systemic Principles based on the unfailing revolutionary Trinity of Language, Race and Nationhood!

It is The ACTIVISM that not only spells out Tamilian Emancipation but which also will fulminate in the blossoming of the Supernal World Proletarian Fraternity of an Enlightened Tomorrow!

We Appeal to you to Come And Join Hands With Us, irrespective of your party differences; to come forward without hesitation to dicharge your long outstanding obligation to society! Aid us to persevere in our chosen efforts—to diligently plod on in our Gargantuan Task, toward a Mighty Goal! Long live the Tamil Commonwealth!

The Steering Committee —
'Oo. Tha. Mu. Ka.' Inauguration Conference,
C/o 'Thenmozhi', Sennai-600 005, Thamizh Nadu.

மொழிபெயர்ப்பு : தென்மொழி மறை. நித்தலின்பன்.

## உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் உயர்ந்த குறிக்கோள்கள்.

0 தூய்மையான தமிழ் மொழி முன்னேற்றம் !
0 சாதி, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம் !
0 இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல் !
0 தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல் !
0 மனம், அறிவு, வாழ்க்கை — இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி !
0 எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை !
0 பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம் ! — ஆகிய ஏழு கொள்கைகள் !

www.thamizham.net - Free E book No 7514

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)
திருக்கின்றனர் அல்லது சேருகின்றனர் என்பது பற்றி நாம் கவலைப் படத் தேவையில்லை. அவர்களும் மற்றவர்கள் போல் மக்களாக மதிக்கப்பட வேறு எந்த மதம் வாய்ப்பளிக்கின்றதோ, அதில் அவர் -கள் சேரட்டும்; அல்லது சேராமல் போகட்டும்'' என்றதன் பொருள் என்ன? தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் அடிமை நிலையிலிருந்து உரிமைநிலை பெற விரும்புகின்றார்கள் என்பது தானே பொருள்? 'அல்லாவை நோக்கி நகரத் தொடங்கி விட்டார்கள்'' என்பதால் அவர்களனைவரும் முசுலீம் மதத்தில் சேர வேண்டுமென்று ஏன் பொருள் கொள்ள வேண்டும். கடந்த 19 ஆண்டுகளாகவே மொழித் தூய்மையைப் பேணி வருபவர் முசுலீம் மதத்தால் அரபுமொழி வல் லாண்மை ஏற்படுமென்று அறியாதவரா? உ. த. மு. க.குறிக்கோளில் கூட, முதலில் ''தமிழ் தன் மொழியமைப்பில் தாழ்ந்து தூய்மை யிழந்து பிறமொழி வல்லாண்மையின் கீழ்ச் சீர் குலைந்து வருகிறது; அதைத் தடுத்து நிறுத்தி மேம்பாடுறச் செய்ய வேண்டும்'' என்று தானே காட்டப் பெற்று இருக்கிறது. மதம் மாறியது சரி என்று யாரும் கருத வேண்டியதில்லை. அடிமை நிலையிருந்து விடுபட எண்ணியுள்ளார்கள் என்றுதான் கருத வேண்டும். ஏன் விடு பட எண்ணினார்கள் என்பதை அரசும் மக்களும் உணர்ந்து, அவர்களை நல் வழிப்படுத்த வேண்டுமே ஒழிய, அவர்கள் மீது வீண்பழி ஏற்று தல் நம் அறியாமையைத்தான் குறிக்கும். ஏனென்றால் அவர்கள் (தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள்) மொழியுணர்வு இருந்திருந்தால் மதம் மாறாமல் மதத்திலிருந்தே விடுபட்டிருப்பார்கள் என்பது திண்ணம்.

இது நிற்க! தி. க. வைப்பற்றி அன்பர்கள் சாடுவதும் சரி யில்லை. அவர்கள் நிலையில் அவர்கள் தம் வேலையைச் செய்து வரு கின்றனர். தாங்கள் அந்தக் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசினால், கருத்தறிவித்தால் அதில் என்ன தவறு? இன்றுள்ள இயக்கங்களில் அதனைத் தவிர்த்து வேறெந்த இயக்கம் தமிழின மீட்சிக்கு போராடுகின்றது? எஃது எவ்வாறேனும் உ. த. மு. கழகம், தக்கன ஏற்றுத் தகாதன புறந்தள்ளி மேடேறும் என்பது கல்மேல் எழுத்தென உறுதி! வாழ்க! உ. த. மு. க! வளர்க அதன் கொள்கைகள்! — குழந்தை ஈகவரசன், திருச்சி.

0 : 875 : பெருமதிப்பிற்குரியீர். வணக்கம். சிறப்பான ஓர் இயக்கத் தோன்றலுக்கு வழி வகுத்து நீங்கள் உயர்ந்து நிற்கின்ற நிலையில், உங்களின் மத எதிர்ப்பு ஆசிரியவுரைக்கு மறுப்புத் தெரி வித்து அன்பர்கள் தீட்டிய மடலினை இத்திங்கள் தென்மொழியில் கண்ணுற்றேன். மக்களினத்தினைச் சாதிகள் என்னும் வேற்றுமை உணர்வுப் பள்ளத் தாக்குகளில் தள்ளி, அவர்கள் இணைந்திடா வண்ணம் செய்து, அதன் மூலம் பல நூற்றாண்டுகளாக ஒட்டுண்ணி போல் நம்மைச் சுரண்டி வாழ்கின்றது ஆரியப் பார்ப்பன இனம்,

www.thamizham.net - Free E book No 7514

இந்நிலையில் பேரறிவாளர் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் போன்றோர் தோன்றி, எந்தச் சாதியால் மக்களைப் பார்ப்பனர் பிரித்து வைத்தனரோ,அதே சாதியினை அடிப்படையெனக் கொண்டு, பள்ளி, கல்லூரிகளில் சலுகை, பணியமர்த்தங்களில் இட ஒதுக்கீடு என்று அரசு. சட்டமியற்றக் கரணியமாயிருந்தனர். இச் சலுகைகளால் குமுகாயத்தின் அடி நிலை மக்கள் முழுப் பயனையும் அடைந்திடாத நிலையில், முன்னேற்றம் பெற்று முடிந்திடாத வகையில் ஆரியப் பார்ப்பன ஏடுகள் எழுதி வருகின்றன. ... இருப்புப் பாதை வண்டி நேர்ச்சியெனினும் கூட, கரணியத்தை ஆய்ந்திடாமல், சாதி அடிப்படையில் பதவி வழங்கப் பட்டதால் தகுதிக் குறைவானவர் (20 ஆண்டுக்கும் மேலாக பணி புரிந்தவர்) பதவிக்கு வந்ததால் நிகழ்ந்தது என்று பொது நிலைக் குமுகாய மக்களின் எண்ணங்களைத் திசை திருப்பிடச் செயல்பட்டுக் கொண்டுள்ளனர். இந்நிலையில், உண்மைச் சொரணையுள்ள எவரும் வீரமணிக்குத் துணையாய் அணி சேர்ப்பதில் தவறென்ன? எனவே மதவுணர்வுகளை அருள் கூர்ந்து, அரசியலாளர், மடத் தலைவர், பொது நிலையாளர்கள் மறந்து மனங்களில் உள்ள எண்ண எழுச்சிகளை உணர்ந்து செயல் படவேண்டும். உ. த. மு. க. குமுகாய அடி நிலை மக்களின் அல்லல் போக்கிடும் அரியதோர் இயக்கமாக என்றும் செயலாற்றிடல் வேண்டும் என்பது பேரவா. இதனை இவ்வியக்கத்தினைத் தவிர எந்த ஓர் அரசியல் கட்சியும் செய்ய அருகதையற்றது.

— மு. பழ. **சதாசிவம்**, சேலம்-6.

---

# மாணவர்கள், மகளிர்கள் கவனிக்க!

நடைபெற விருக்கும் உ. த. மு. க. மாநாட்டில் **மாணவர் அரங்கத்திலும், மகளிர் அரங்கத்திலும்** கலந்து கொண்டு, தமிழ் மொழி, இன நலம் குறித்துக் கருத்துரையாற்ற விரும்பும் மேனிலைப் பள்ளி, கல்லூரி **மாணவப் பேச்சாளர்களும், மகளிர் பேச்சாளர்களும்** உடனடியாக மாநாட்டு அமைப்பாளரிடம், தங்கள் பெயர், பயிலும் வகுப்பு, முகவரி, தாங்கள் பேச விரும்பும் கருத்துத் தலைப்பு இது வரை பங்கு கொண்டுள்ள கூட்டங்கள், மாநாடுகள் ஆகிய விளக்கங்களைத் தெரிவித்து, மடல்வழி 20-10-81க்குள் தொடர்பு கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம். அதற்குப் பின்னர் வரும் வேண்டுகோள்கள் கவனிக்கப்பட மாட்டா.

அமைப்பாளர், உ. த. மு க.
மே/பா. தென்மொழி, சென்னை-5.

---

**சென்னை, பெரியார் திடலில் உ. த. மு. க. தொடக்க மாநாடு நவம்பர் 7,8. அனைவரும் அணியமாகுங்கள்!**

www.thamizham.net - Free E book No 7514

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

2. **தலைமைக்குழு :** கழக முதல்வரைத் தலைமையாகக் கொண்டதும், அவருக்குத் துணையாக இயங்குவதும், கருத்து. செயல், அமைப்பு முதலியவற்றில் இவரொடு கலந்துரையாடிக் கழகத்தையும், அதன் கொள்கைகளையும், செயல்களையும் கட்டிக் காப்பதும், செயற்படுத்துவதுமாகிய—ஐவர் கொண்டது **தலைமைக் குழு.**

2-1) குழுவினர் ஒவ்வொருவரும் தலைமைக் குழுவுறுப்பினர் என்னும் பெயர் பெறுவர்.

2-2) தலைமைக்குழுவில் இருவர் பெண்பாலராக இருத்தல் வேண்டும். ஆட்சிக்குழு விரும்பின் மூவராகவும் அமர்த்தப் பெறலாம்.

3. **அறிஞர் குழு :** இக் குழுவில் எழுவகை அறிஞர்குழு இடம் பெறும்.

(3-1) தமிழியல்மூணவர் குழு. (3-2) குமுகாயத்திறவோர் குழு.
(3-3) அரசியல் அறிவர் குழு. (3-4) பொருளியல் அறிஞர்குழு.
(3-5) கலைத்திறலாளர் குழு. (3-6) அறிவியல் ஆய்வர் குழு.
(3-7) பண்பியல் சான்றோர் குழு.
(3-8) ஒவ்வொரு குழுவிலும் எழுவர் உறுப்பினர்.

(3-9. ஒவ்வொரு குழுவிலும் உள்ள எழுவரில் ஒருவர் தலைவராக அமர்த்தப் பெறுவர்.

(3-10) ஒவ்வோர் அறிஞர் குழுவிலும் உள்ள உறுப்பினர்கள் அறுவரில் மூவர் பெண்களும், மூவர் ஆண்களுமாக இருப்பர்.

(3-11) குழுத்தலைவர், தகுதிக்கும், கால, இடத்திற்கும், நிலைக்கும் பொருத்தமாக ஆணாகவோ பெண்ணாகவோ இருப்பர்.

4. **துணைத் தலைமைக் குழு :** தலைமைக் குழுவுக்கு,

(4-1) அகத் துணைத் தலைவர்களும் (16 + 1 = 17 பேர்)
(4-1) அகப்புறத் துணைத் தலைவர்களும் (21)
(4-3) புறத்துணைத் தலைவர்களும் (9 — 1 = 8 பேர்)
(4-4) புறப்புறத் துணைத் தலைவர்களும் (உறுப்பான அயல் நாடுகளின் எண்ணிக்கையைப் பொறுத்து).

— துணைத் தலைவர்களாக இருப்பர்.

(அகப் புற விளக்கங்களைச் செயற்குழு அமைப்பில் காண்க.)

5. **செயற்குழுவினர் :**

5-1) கழகத்திற்குப் **பொதுச் செயலாளர்** ஒருவர்.

5-2) **செயலாளர்கள் :** 1) அமைப்புச் செயலர், 2) உள்முக நடவடிக்கைச் செயலர், 3) கொள்கை பரப்புச் செயலர், 4) தமிழ்த் துறைச் செயலர், 5) குமுகத்துறைச் செயலர், 6) அரசியல் துறைச்

www.thamizham.net - Free E book No 7514

செயலர், 7) பொருளியல் துறைச் செயலர், 8) கலைத்துறைச் செயலர், 9) அறிவியல் துறைச் செயலர், 10) பண்பியல் துறைச் செயலர், 11) அயலகத் தொடர்புச் செயலர் — என பதினொருவர் தலைமைக் கழகச் செயலாளர்கள் ஆவர்.

5-3). **துணைச் செயலாளர்கள்** : மாவட்டத்திற்கு ஒருவர் மேனி, 1) சென்னை, 2) செங்கற்பட்டு, 3) வடவார்க்காடு, 4) தென்னார்க்காடு, 5) தஞ்சை. 6) திருச்சி, 7) புதுக்கோட்டை, 8) சேலம், 9) தகடூர், 10) கோவை, 11) பெரியார், 12) நீலமலை, 13) முகவை, 14) மதுரை, 15) நெல்லை, 16) கன்னியாகுமரி — ஆக, பதினாறு மாவட்டத்திற்கும் **பதினாறுவரும்**,

5-4) **மாநிலத்திற்கு** ஒருவர் மேனி, தமிழ்நாடு நீங்கிய,

1) ஆந்திரம், 2) கேரளம், 3) கருநாடகம், 4) அசாம், 5) பீகார், 6) குசராத்து, 7) அரியானா, 8) இமயமலைப் பைதிரம் 9) சம்மு, காசுமீரம், 10) நடுவண்பைதிரம், 11) மகாராட்டிரம், 12) மணிப்பூர், 13) மேகாலயம், 14) நாகாலாந்து, 15) ஒரிசா, 16) இராசத்தான், 17) பஞ்சாப், 18) சிக்கிம், 19) திரிபுரா, 20) உத்திரப் பைதிரம், 21) மேற்கு வங்காளம் — ஆகிய 21 மாநிலங்களுக்கும் இருபத்தொரு பேரும்,

5-5) **இந்திய ஆட்சி நிலங்களான**, 1) அந்தமான், நிகோபார் தீவுகள், 2) அருணாசலப் பைதிரம், 3) சண்டிகார், 4) தாதரா, நாகர், அவேலி, 5) தில்லி, 6) கோவா, டையூ, டாமன், 7) இலக்கத் தீவுகள், 8) மிசோராம், 9) புதுவை — ஆகிய ஒன்பது ஆட்சி நிலங்களுக்கும் ஒன்பது பேரும்,

5-6) இந்தியா தவிரத் தமிழர் வாழ்கின்ற உலக **நாடுகள்** ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவரும் (உறுப்பு நாடுகள் எண்ணிக்கையைப் பொறுத்தது) ஆகிய அனைவரும் **துணைச் செயலர்கள்** எனப் பெறுவர்.

5-7) **துணைச் செயலர்களும் துணைச் செயற்குழுவும்** : இவர்களுள்,

5-7-1) தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், தமிழ் நாட்டுடன் ஒட்டிய புதுவை மாநிலத்திலும் உள்ள துணைச் செயலர்கள் **அகத்துணைச் செயலர்கள்** என்றும், அவர்கள் அடங்கிய குழு **அகத்துணைச் செயற்குழு** என்றும்,

5-7-2) இந்திய ஆட்சியில் தமிழ்நாடு நீங்க உள்ள 21 பிற மாநிலங்களிலும் உள்ள துணைச் செயலர்கள் **அகப்புறத் துணைச் செயலர்கள்** என்றும், அவர்கள் அடங்கிய செயற்குழு அகபுறத் **துணைச் செயற்குழு** என்றும்,

www.thamizham.net - Free E book No 7514

5-7-3) இந்திய ஆட்சி நிலங்களில் புதுவை நீங்கலாக உள்ள பிற 8 ஆட்சி நிலங்களில் உள்ள துணைச் செயலர்கள், **புறத்துணைச் செயலர்கள்** என்றும், அவர்கள் அடங்கிய செயற்குழு **புறத்துணைச் செயற்குழு** என்றும்,

5-7-4) தமிழர் வாழ் உலக நாடுகள் அனைத்திலும் உள்ள உறுப்பினர்கள், **புறப்புறத்துணைச் செயலர்கள்** என்றும், அவர்கள் அடங்கிய செயற்குழு **புறப்புறத்துணைச் செயற்குழு** என்றும் பெயர் பெறும்.

6. **பொருளர், துணைப் பொருளர்கள் :**

6-1) **தலைமைப் பொருளர்** ஒருவரும், அவர்க்குத் துணையாக,
6-2) **அகத்துணைப் பொருளர்கள்** பதினேழ்வரும்
6-3) **புறத்துணைப் பொருளர்கள்** எண்மரும்,
6-4) **புறப்புறத்துணைப் பொருளர்களும்**
துணைப் பொருளர்களாக இயங்குவர்.

7. **ஆட்சிக் குழு :** இயக்குநர், தலைமைக் குழுவுறுப்பினர்கள், அக, அகப்புற, புற, புறப்புறத் துணைத்தலைவர்கள், எழுவகை அறிஞர்குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்களாகிய பொதுச் செயலர், செயலர்கள் பதினொருவர், அக, அகப்புற, புற, புறப்புறத் துணைச் செயலர்கள், தலைமைப் பொருளர், அக, அகப்புற, புற, புறப் புறத் துணைப் பொருளர்கள் — ஆகிய அனைவரும் அடங்கிய குழு **பேராட்சிக்குழு** அல்லது **பேராயம்** என்றும்,

7-1) இயக்குநர், தலைமைக்குழு உறுப்பினர்கள், அறிஞர் குழுத் தலைவர்கள், பொதுச்செயலர், செயலர்கள், தலைமைப் பொருளர் ஆகியோர் அடங்கிய குழு **ஆட்சிக்குழு** அல்லது **ஆயம்** என்றும், அழைக்கப் பெறும்.

8. இனி, மொத்தத்தில் கழகக் கொள்கை யறிவிப்புப் (Manifesto) பொத்தகத்தில் கீழ்க்காணும் பத்துப் பிரிவுகள் அடங்கி யிருக்கும்.

1) கொள்கைகளும் கொள்கை விளக்கங்களும்.
2) அமைப்பு முறைகள்.
3) செயல் திட்டங்கள்.
4) இயக்கங்கள்.
5) பொறுப்புகள்.
6) அதிகாரங்கள்.
7) பொருள்கள், நன்கொடைகள்.
8) தேர்தல்கள்.
9) தவறுகள், குற்றங்கள், தண்டனைகள்.
10) திருத்தங்கள், மாற்றங்கள், நீக்கங்கள், சேர்ப்புகள்.

www.thamizham.net - Free E book No 7514

9. கழகத்திற்கு மொத்தமாக உதவும் பொருளுதவியாளர்கள் மிகவும் மதிக்கப் பெற்றுப் புரவலர்களாகப் போற்றப் பெறுவர். அவர்கள் பேராயத்திலும், ஆயத்திலும் அவரவர் தகுதிக்கேற்ப, கண்ணியவுறுப்பினர்களாகப் பெருமையும் கருத்தறிவிக்கும் உரிமையும் பெறுவர்.

## பொருளுதவியாளர் தகுதிகள் :

| தொகையளவு | பெறும் சிறப்புப் பட்டம் | கழகமுத்திரையுடன் தரப்பெறும் மாழும் (Medal) |
|---|---|---|
| 1) ஓர் இலக்கமும் அதன் மேலும் தருவார் | கழக வேளிர் | 1 பொன் மாழும் |
| 2) 75 ஆயிரமும் ,, | கழகக் குரிசில் | $\frac{3}{4}$ ,, ,, |
| 3) 50 ஆயிரமும் ,, | கழக வள்ளல் | $\frac{1}{2}$ ,, ,, |
| 4) 20 ,, | கழகப் புரவலர் | $\frac{1}{4}$ பொன் $\frac{1}{2}$ வெள்ளி } கலந்த மாழும |
| 5) 10 ,, ,, | கழகக் காப்பாளர் | முழுநிறை வெள்ளி மாழும் |
| 6) 5 ,, ,, | கழக அளியர் | $\frac{1}{2}$ நிறை ,, ,, |
| 7) 2 ,, ,, | கழக அருளாளர் | $\frac{1}{4}$ ,, ,, ,, |
| 8) ஓர் ,, ,, | கழக அறக்கொடையர் | வெண்கலம் ,, |
| 9) 500 உம் ,, | கழக நன்கொடையாளர் | செம்பு ,, |
| 10) 250 ,, ,, | கழக அன்பர் | நிலைவெள்ளி ,, |

10. இவைபோலும் அனைத்து வகு முறைகளிலும் செப்பமும், நுட்பமும், திட்பமும் நிறைந்து திகழும். செயற்பாடுகளில் உண்மையும், உறுதியும், தெளிவும் ஒளிர்ந்து மிளிரும் என்க.

## வெளிநாட்டிலிருந்து வரும் பேராளர்கள் கவனிக்க !

மாநாட்டிற்கு வெளிநாட்டிலிருந்து வரவிருக்கும் பேராளர்கள், முன்கூட்டியே அமைப்பாளருக்கு எழுதித் தெரிவிப்பின் அவர்களுக்கு உறையுளும், உணவும் ஏற்பாடு செய்யப் பெறும். — செயலர்.

## மாநாட்டுத் தீர்மானங்கள்.

அண்மையில் நடைபெறவிருக்கும் உ. த. மு. க. தொடக்க மாநாட்டில், இரண்டாம் நாள் முற்பகல் நடைபெற விருக்கும் 'தமிழினக் காப்பு மாநாட்டு' இறுதியிலும், பிற்பகல் நடைபெற விருக்கும் 'உ. த. மு. க. தொடக்க மாநாட்டு' இறுதியிலும், நிறைவேற்றப்பட வேண்டிய முகாமைத் தீர்மானங்களை அன்பர்கள் மிகவும் சுருக்கமாக வரும் 31-10-81-க்குள் அமைப்பாளர் முகவரிக்கு எழுதி விடுக்கலாம். தேர்ந்தெடுக்கப் பெறும் சிறந்த தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப் பெறும். — அமைப்பாளர்.

www.thamizham.net - Free E book No 7514

# செய்திகள்

## 1) இலக்கிய மன்றத் தொடக்க விழா. கருவலூர் :

கடந்த மடங்கல் உச (9-9-81) அறிவன் பிற்பகல் மூன்று மணியளவில், அவநாசி வட்டம், கருவலூர் அரசு உயர்பள்ளியில், இலக்கிய மன்றத் தொடக்க விழா, பள்ளித் தலைமையாசிரியர் திரு. இரா. வேங்கடரமணன். க. இ; ப. இ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. புலவர். திரு. அ. க. இராமசாமி. க. இ. (தமிழாசிரியர்) அவர்கள் வரவேற்புரையாற்றினர். தலைவர் முன்னுரைக்குப்பின் பாவலரேறு பெருஞ்சித்திரனர், 'கலையுணர்வும் அறிவுணர்வும்' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றி, இலக்கிய மன்றத்தைத் தொடங்கி வைத்தார். மாணவர்களும் மாணவிகளும் மிக அமைதியாக இருந்து இறுதிவரை சிறப்புரையைச் செவிமடுத்தனர். இறுதியில் புலவர். திரு. ப. துரையரசன், (தமிழாசிரியர்) நன்றியுரையாற்றினர்.

## 2) இலங்கைத் தமிழர் படுகொலைக்குக் கண்டனப் பொதுக் கூட்டம். அவநாசி.

சென்ற 9-9-81, அவநாசி, அரசு நடுநிலைப் பள்ளி அரங்கத்தில், தமிழீழத் தோழமைக் கழகச் சார்பாக இலங்கைத் தமிழர் படுகொலைக்குக் கண்டனப் பொதுக் கூட்டம், திரு. தென்மொழி. ப. துரையரசன் அவர்கள் தலைமையில் நடந்தது. அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த தலைவர்கள் அக் கூட்டத்தில் கலந்து கொண்டு கண்டனவுரையாற்றினர். திருவாளர்கள் ஏ. சின்னசாமி (இந்தியப் பேராயம்), க. அன்புச்செழியன் (அ. தி. மு. க.) எசு. எம். இராமசாமி. (தி. மு. க.), கே. கே. சுப்பிரமணியம் (மக்கள் கட்சி), ஆர். பழனிச்சாமி (கா. கா. தே. கா.). தி. நா. அறிவரசு. (தி. க.), செமபியன் வல்லத்தரசு, சோமனூர் வழக்கறிஞர் ப. பத்மநாபன் ஆகியோர் கருத்துரைக்குப்பின், பாவலரேறு பெருஞ்சித்திரனர், நீண்ட உணர்வுரையாற்றினர். திரு. க. அங்கமுத்து நன்றி கூறினர். இறுதியில் இலங்கைப் படுகொலையைக் கண்டித்தும், இத்தகைய கொடுமைகள் இனியும் நடைபெறு வண்ணம் தடுத்து நிறுத்துவதற்கு, உலகஒன்றியப் பேரவை சார்பாக ஒரு நடுநிலைக் குழு அமைக்கவும், தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு இந்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளும் மூன்று தீர்மானங்களைக் கூட்டத்தினர் ஒருமனமாக நிறைவேற்றினர்.

## 3) அன்புச்சந்திரன் — செந்தாமரை வாழ்க!

சென்ற 10-9-81 வியாழன் காலை உடுமலைப்பேட்டை தி. க. தலைவர் திரு. வா. ப. அன்புச்சந்திரன் அவர்களுக்கும், செல்வி.

www.thamizham.net - Free E book No 7514

செந்தாமரைக்கும், காங்கயத்தில் நடந்த திருமணத்தின், வரவேற்பு விழா, அன்று மாலை 5 மணியளவில், உடுமலை, இராமர் திருமண மண்டபத்தில், மாநில தி. க. இளைஞரணிச் செயலர், திரு. கு. இராம கிருட்டிணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் ந. சேதுபதி. க. மு, தி. வெங்கடேசன், செல்வி. அருள்மொழி, பா. கு. கிருட்டிணசாமி, பாவலர் மது நெஞ்சன், புலவர் கடவுள் இல்லை, பாவலர் அறவாழி ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர். இறுதியாக, பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களும், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் மானமிகு. கி. வீரமணி அவர்களும் அரிய கருத்துரைகள் ஆற்றினர். மணமகனின் நன்றியுரைக் குப்பின் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## 4) இலக்கிய மன்றச் சிறப்புக் கூட்டம், சிங்காரப் பேட்டை :

கடந்த 17 9-81 அன்று பிற்பகல் 3-30 மணியளவில் தகடூர், சிங்காரப்பேட்டை, அரசினர் உயர்நிலைப் பள்ளியில் இலக்கிய மன்றச் சிறப்புக் கூட்டம், பள்ளித் தலைமையாசிரியர் திரு. மாணிக்கனார் அவர்கள் தலைமையில் இனிதே நடைபெற்றது. தலைமைத் தமிழாசிரியர் புலவர். திரு. அ. கண்ணையா வரவேற்புரையாற்றினார். தலைவர் முன்னுரைக்குப்பின், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் திரு. இரா. வி. நடேசனார் அவர்கள் முன்னிலை உரையாற்றினார். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் சிறப்புச் சொற்பொழி வாற்றி மாணவர்களை மகிழ்ச்சியுறச் செய்தார். இறுதியில் தமிழா சிரியர் திரு. அ. பச்சையப்பன் நன்றியுரைக்குப் பின் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## 5) பெரியார் பிறந்த நாள் விழா. ஊற்றங்கரை :

சென்ற 17-9-81 வியாழன் மாலை 7 மணியளவில் ஊற்றங்கரை, வெள்ளிச் சந்தைத் திடலில், தந்தை பெரியார் 103-ஆவது பிறந்த நாள் விழாப் பொதுக் கூட்டம், ஊற்றங்கரை ஒன்றிய, பகுத்தறிவாளர் கழகச் சார்பில் நடைபெற்றது. கூட்டத் திற்கு, ஊற்றங்கரைத் தமிழ்ச்சங்கச் செயலர் திரு. இர. டேவிட்சன் செயசந்திரா க. மு. அவர்கள் தலைமை தாங்கினார். ஒன்றிய பகுத் தறிவாளர் கழகத் தலைவர் திரு. சி. சுவாமிநாதன் வரவேற்புரை யாற்றினார். நூற்றாண்டு விழாப் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, காவல்துறை ஆய்வாளர் திரு. வெ. வீராசாமி பரிசுகள் வழங்கினார். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் விழாச் சிறப்புரையாற்றினார். திரு. சா. தண்டபாணி அறி. இ. அவர்களின் நன்றியுரைக்குப்பின் நிகழ்ச்சி இனிது நிறை வுற்றது.

www.thamizham.net - Free E book No 7514

## 6) அறிவுத் தொகையன் — மாசத்தி வாழ்க! நன்மகன் — வண்டார் குழலி வாழ்க!

கடந்த கன்னி எ (23-9-81) அறிவன் காலை 9 மணியளவில், சீர்காழி, விசயராகவலு நினைவுத் திருமணக் கூடத்தில், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் மானமிகு. கி. வீரமணி. க. மு; ச. இ. அவர்கள் தலைமையில், செல்வன் அறிவுத் தொகையன் (ஞான சேகரன்) க. மு. அவர்களுக்கும், செல்வி. மாசாத்திக்கும், செல்வன் நன்மகன் (சுகுமாரன்) அவர்களுக்கும், செல்வி வண்டார்குழலிக்கும், வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த விழா சிறப்புற நடைபெற்றது. நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் தன்மான வீரர் கா. சுப்ரவேலு அவர்கள் வரவேற்புரையாற்றினார். உயர்திருவாளர் -கள் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், பாவலரேறு பெருஞ்சித்திரனார், உவமைப் பாவலர் சுரதா, பேரா. பர். ச. அகத்தியலிங்கம் பேரா. ப. சீனிவாசன், பேரா. பாவலர் முத்து. குணசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கள் சார்பில் 'பெரியார் பெருந்தொண்டர்' திரு. நாகை காளியப்பன் அவர்களைப் பாராட்டிப் பொன்னுடை போர்த்தப் பெற்றதுடன், சிதம்பரம் அரசினர் ஆண்கள் நந்தனார் மேனிலைப் பள்ளிக்கு அறக் கட்டளையாக உருபா ஆயிரம் வழங்கப்பட்டது. பள்ளித் தலைமை யாசிரியர் திரு. கோ. செகந்நாதன் அறக்கட்டளைத் தொகையைப் பெற்றுக் கொண்டார். திரு. கி. இராசமாணிக்கம் அவர்கள் நன்றி யுரையுடன் மணவிழா இனிது நிறைவுற்றது.

## 7) ஆசிரியர் நாள் விழா, கந்தர்வகோட்டை.

சென்ற 24-9-81 காலை 10 மணியளவில், புதுக்கோட்டை, மா.வ; கந்தர்வகோட்டையில் ஆசிரியர்பேரவை நடுவங்கள் சார்பில், ஆசிரியர் நாள் விழா கொண்டாடப் பெற்றது. விழாவிற்கு திரு. இ. குமாரவேலு க. மு. ஆ. ப. (பள்ளித்துணை ஆய்வாளர்) தலைமை தாங்கினார். துணைக் கல்வி அலுவலர் திரு. டி. செபமாலை க. இ; ஆ. ப. முன்னிலை ஏற்றார். விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாகப் பாவல ரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'தமிழின மேம்பாடும் ஆசிரியர் பங்கும்' என்னுந்தலைப்பில் அரியதோர் ஆய்வுரை நிகழ்த்தினார். பின்னர் பேரா. கு. துரைப்பாண்டியன் க. மு. அவர்கள் நடுவராக இருக்க வழக்கு மன்றம் நடைபெற்றது. பேரா. ஆர். பாலச்சந்திரன் க. மு., புலவர் திரு. இராம. சொக்கலிங்கனார் க. மு. ப. இ. ஆகியோர் பங்கேற்றனர். தொடக்கத்தில் திரு. முருகு. வீராச்சாமி வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. இரா. நடராசன் அறிக்கை படித்தார். இறுதியில் திரு க. இராசேந்திரன் நன்றி நவின்றார். விழாவில் முதுபெரும் ஆசிரியர்களுக்குப் பாராட்டு நடந்தது.

www.thamizham.net - Free E book No 7514

## பிற செய்திகள்

### புதுவைத் தனித்தமிழ்க் கழக மூன்றும் ஆண்டு விழா:

கடந்த மடங்கல் கச (30-8-81) புதுச்சேரி, தனித்தமிழ்க் கழக மூன்றும் ஆண்டு விழா, வணிக அவையில் சிறப்புற நடைபெற்றது. கழகச் செயலர் திரு. க. தமிழமல்லன் க. இ; கல். இ. தலைமை தாங்கினார். திரு. தமிழநேயன் வரவேற்புரையாற்றினார். திரு. சீனு. அரிகிருட்டிணன் ஆண்டறிக்கை படித்தார். தனித்தமிழ்க் கழகத்தின் சிறுகதைத் தொகுப்பு நூலான 'விருந்தை'ப் புதுவைச் சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு. எம். ஓ. எச். பாரூக் வெளியிட்டார். நூலின் முதற்படிகளைத் திருவாளர்கள் இராமகிருட்டிண சிங், பா. தண்டபாணி, சிவ. கண்ணப்பா, ந. விநாயகம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். பேரா அ. பசுபதி, க. மு; புலவர். வே. முத்துக் குமரசாமி க. மு; கல். இ. ஆகியோர் நூல் பற்றிய திறனாய்வுரை நிகழ்த்தினர். திரு. சி. தமிழ்மாறன். க. இ, கல். இ. நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுற்றது.

### நன்கொடைகள்

**சூலை, ஆகத்து, செப்தம்பர் மாத நன்கொடைவரவுகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | 29-6-81 | இரணியன், கோவை (சூலை, ஆகத்-செப்) | 30-00 |
| 2. | 17-7-81 | ப. குணசேகரன், சென்னை-2. | 100-00 |
| 3. | 25-7-81 | வாரப்பட்டி, இளங்கண்ணன்-சாரதாமணிக்கு 14-6-81-இல் பிறந்த பெண் மகவிற்குச் செந்தமிழ்ப்பாவை எனப் பெயரிட்டமைக்காக | 100-00 |
| 4. | 3-8-81 | திருப்பராய்த்துறை சொக்கப்பன்-கலைச்செல்வி அவர்கள் மகன் அறிவழகனின் நான்காமாண்டு நிறைவின் நினைவாக | 5-00 |
| 5. | 17-8-81 | தென்மொழியன்பர் முகவை அருள் இறைவோன் பணியமர்த்தம் பெற்றதன் நினைவாக | 25-00 |
| 6. | 7-9-81 | அ. தங்கராசன், பறம்புக்குடி, புதுமனை புகுவிழா நினைவாக | 50-00 |

0 குழந்தைகள் செந்தமிழ்ப் பாவை, அறிவழகன் நீடூழி வாழ தென்மொழியின் உளமார்ந்த வாழ்த்துகள்.

0 நன்கொடை நல்கிய தூய தமிழ் நெஞ்சங்கட்கு நன்றி.

---

### பாவலரேறு நிகழ்ச்சிகள்

மாநாட்டுப் பணிகளைக் கருதி, உ. த. மு. க. அமைப்பாளர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சென்னையிலேயே தங்கியிருக்க வேண்டியிருப்பதால், ஏற்கனவே அமைந்த அக்டோபர் மாத நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒத்திவைக்கப் பெற்றன. அந் நிகழ்ச்சிகளை அமைத்த அன்பர்கள் நவம்பர் மாதம் 10-ஆம் பக்கல்களுக்குமேல் நிகழ்ச்சிகளை அமைக்கத் தொடர்பு கொள்ளுவார்களாக.

---

www.thamizham.net - Free E book No 7514

புரையோடச் செய்து, தலையின் இழிந்த மயிரனையராய்த் தம் நிலையின் இழிந்து வாழும் தரங்கெட்ட — மறமற்ற — மரமண்டைத் தமிழர்களுக்கு அவ் வாசிரியவுரை ஓர் அதிர் வெடி ; விழித் தெழச் செய்யும் பேரிடி ! அதனைப் படித்தோர் துடித்தெழுவர் ; நிலைமாறிச் சென்ற தமிழனின் இழிநிலையை எண்ணி உருகுவர் ! இனிமேல் பழம் பண்போடு, தமிழுணர்வோடு ஒழுகி, என்பு தோல் போர்த்த உடலம் உயிரோடு அலையும்வரை உ. த. மு. க வை ஆதரிப்பார் ; மறவார் என்பது ஒருதலை ! அதில் தங்களைப் பிணைத்துக் கொள்வர் என்பது வெள்ளிடை ! உரிமையோடு வாழ்வர் என்பது உள்ளிடை !

ஆனால், இதற்கும் அசையாது உறங்குவோர் உளரெனில் அறிவற்ற — தமிழரெனப் பெயர் பெற்ற — அம் முழு முண்டங்கள் அழிவர் என்பது தேற்றம் ; அவர்கள் அடைவர் ஏமாற்றம் ! இனி, அவர்களை என்னென்றுரைப்பது ? இதுபற்றி எவரிடம் போய் இடிப்பது ? எனவே, உணர்வற்றோர் ஒழிந்து போகட்டும் ? ஒன்றுக்கும் உதவா ஓட்டைச்சட்டியை இனியேன் தட்டிப்பார்க்க வேண்டும். விட்டு விடலே நன்று ! நமக்கது இழப்பும் அன்று ! ஆயினும், அவர்களால் ஒரு பயனுண்டு ! அஃதாவது, உண்மைத் தமிழர்களை அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது. உலகில் உண்பதற்கென்றே வாழ்ந்து, தின்பதற்கென்றே திரிந்து, தினவெடுத்த பொறிகளுக்கு நிலை விடுத்து இழிந்த வழியில் கனவிலும் இரைகொடுக்க அலைந்து வரும் கறை படிந்த பிறரடி வருடும் பிண்டங்களை வைத்தா உ. த. மு. க. வை இவ் வண்டத்தில் வளர்க்க முடியும் ? நச்சுப் பாம்புகளைக் கொண்டா நல்லுயிர் காக்க முடியும் ? அச்சில்லா வண்டிகளைக் கொண்டா அயலூர் செல்ல முடியும் ? ஆதலால், களைகளை நாம் அகற்றுவோம் ; தெளிந்து வருவோரைத் திரட்டுவோம் ! அறியாது தூங்குவோரை எழுப்புவோம் ! துயர் துடைப்போம் ! புதுக் குமுகாயம் படைப்போம் ! தூங்குவது போல் நடிப்போரை, — தனித் தமிழை வெறுப்போரைத் தூக்கி யெறிவோம் ! அடிமையாய்க் கிடப்போர்க்கு அறிவுறுத்துவோம் ! ஆனால், அதுவே துறக்கமெனத் துயில்வோரை, சீ... சீ... நாயென நாம் விடுத்து நகருவோம் ! நம் கொள்கைகளை நிறைவேற்றச் செயல்படுவோம் !

இனி, தங்களின் ஆசிரியவுரை, 'உ. த. மு. க. ஏன் ? எதற்கு ? எனக் கேட்போர்க் கொரு விளக்கமாக இருப்பதினால், அதனைப் படிக்காமல் இருப்போரும், படிக்க வாய்ப்பின்றி அலைவோரும், உ.த.மு.க. பற்றி முழுமையாக அறியாமல் இருப்போரும் அறிந்து — புரிந்து — படித்துத் தெளிந்து — தன்மானம் நினைந்து — கண்போல் உ. த. மு. க. வை விழைந்து போற்ற, அதனைச் சிறுபொத்தகங்களாகவோ சில பக்க அறிக்கைகளாகவோ ஆயிரக் கணக்கில் அச்சிட்டுப் பொதுமக்கள், பல்துறையைச் சார்ந்த ஊழியர்கள், அலுவலகர்கள் முதலானோர் கைகளில் கிடைக்ுமாறு இயலுமளவு செய்வோமேயானால், அதனாலும் பயன் உண்டென எண்ணுகின்றேன் ! ஆதலால், தாங்கள் இது பற்றியும் எண்ணிப் பார்ப்பீர்களாக என அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

— ப. எழில்வாணன், இலக். இ. பள்ளபட்டி, கரூர்.

0 : 870 : பேரன்புடையீர் ! வணக்கம் ! ''தென்மொழி'' வாயிலாகவும் துண்டு அறிக்கை மூலமாகவும் மடல் பார்த்தும் திருச்சிராப்பள்ளி முடிவுகளைத் தெரிந்து கொண்டேன். மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், அறிவியல், கலை, பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் செயலுறும் இயக்கம் என அறிவித்துள்ளது கண்டு என்

www.thamizham.net - Free E book No 7514

போன்றோர் மிகுந்த ஏமாற்ற மடைந்தோம். **விடுதலை,** நாடு என்னும் சொற்களை நாடாதது ஏன்? **உலகத் தமிழின விடுதலைக் கழகம்** என்று பெயரிட்டிருக்கலாம். விளத்தம் கிடைக்கும் என நம்புகிறேன். மாநாட்டிற்கு என்னால் இயன்ற நன்கொடை தண்டி அனுப்புகிறேன்.

— வெ. **திருப்பாற்கடல்,** வள்ளியூர்.

*0 : 871 :* தனித்தமிழ்ப் பாவலர் ஐயா அவர்களுக்கு வணக்கம். சென்ற (சூலை) தென்மொழியில் 'மதம் பெரிதில்லை, மக்கள் நலமே பெரிது' என்ற தலைப்பில் எழுதிய ஆசிரியவுரையைப் படித்தேன். இந்து மதம் இழி மதம் என்பதில் என்போன்றோர்க்கு ஐயமில்லை. இந்து மதத்திலிருந்து வெளியேறுகிறவர்களை நீங்கள் பாராட்டினீர்கள். மகிழ்ச்சி - ஆனால் அவர்கள் முகமதிய மதத்தில் சேருவதற்காக நீங்கள் சாய்கால் கொடுப்பது குறித்து நான் மிகவும் வருந்துகிறேன். இந்து மதத்திலிருந்து வெளியேறுகிறவர்களைச், சாதி வேறு பாடற்ற தமிழர் மதத்தை நீங்களே வேறுபிரித்துக் காட்டி அதில் சேரச் சொல்லி (தவத்திரு அடிகளாரை எதிர்பார்க்காமல்) தாங்களே அழைப்பு விடுத்தால் மிகவும் சிறப்பாக விருக்கும். நம்மவர்கள் முகமதிய மதத்தில் சேரச் சேர தமிழ்மொழி, தமிழின உணர்வாளர்கள் நாளுக்கு நாள் குறையத் தொடங்குவதாக நான் கருதுகிறேன். ஏனெனில் அவர்களுக்கு நம் உணர்வுகள் வர வாய்ப்பில்லை. ... தமிழ் மொழி, தமிழின, தமிழ் நாட்டுணர்வுகளை ஒன்று திரட்டுவதே உங்கள் தலையாய பணியாக கொண்டு செயல் பட்டால்தான் உ.த.மு.க. வின் நல்ல கொள்கைகளை மக்கள் நெஞ்சில் பதிக்க முடியும் என்பதனைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். வளர்க தங்கள் தொண்டு. அன்புள்ள தமிழ்த் தொண்டன்,

— புலவர். **வே. புகழேந்தி,** மயிலாடுதுறை.

*0 : 872 :* சூலை மாதத் தென்மொழியின் ஆசிரியவுரைகள், தென்மொழியை மிகவும் பளுவுடையதாய் ஆக்கியுள்ளன. "கடவுள் கட்சி" எனும் அடிப்படையில், மதம் பற்றித் தாங்கள் விளக்கியுள்ளது செறிந்த கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளது. இத்தகு உரைகள் மிகவும் பயன் நல்கக் கூடியவை. — **இரணியன்,** கோவை.

*0 : 873 :* அன்பு கெழுமிய ஆசிரியப் பெருந்தகைக்கு, வணக்கம் பல. சுவடி 18 ஓலை 1-இல் 'உலகத் தமிழினம் ஒன்றெனத் திரண்டது' என்ற தென்மொழிப் பாடலில் கருத்துச் சாரமும், தமிழின ஒருமைப்பாடும் ஒழுங்கே மிளிர்ந்தன.

— பெ. சு. **தியாகராசன்,** வேலாயுதபுரம், அருப்புக் கோட்டை.

*0 : 874 :* ஐயா, தாங்கள் "மதம் பெரிதில்லை மக்கள் நலமே பெரிது" எனும் தலைப்பில் எழுதியதைப் பற்றிப் பல்வேறு வகைகளில் அன்பர்கள் எழுதிவரும் மடல்கள் வழி தாங்கள் என்னவோ திசைமாறி மதச் சேற்றில் புதைந்து விட்டதாகக் கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ண வேண்டியிருக்கின்றது. தென்மொழி ஆசிரியவுரையின் வரி ஒவ்வொன்றும் ஆழமாக எழுத்தெண்ணிச் சமைக்கப் பெற்று இருக்கிறது என்பதை அன்பர்கள் உணர வேண்டும். "இந்து மதத்தை விட்டு வெளியேறியவர்கள் வேறு எந்த மதத்தில் சேர்ந்

(தொடர்ச்சி பக்கம் 31-ஆம் பார்க்க)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)

www.thamizham.net - Free E book No 7514